பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 29 | புதன்கிழமை | 12.04.2023 | கதிர்153

## பொறுப்புக்கூறலுக்காக உள்ளகப் பொறிமுறை

### நிறுவப்படும் என்கிறார் அமைச்சர் அலி சப்ரி

பொறுப்புக்கூறல் செயற்பாடுகளுக்காக உண்மையைக் கண்டறிவதற்கான உள்ளகப்பொறிமுறைஒன்று நிறுவப்படவுள்ளதோடு, 13ஆவது திருத்தச்சட்டமும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்று அயலுறவுத்துறைஅமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதையபொருதாதர நிலைமை மற்றும்அதன் முன்னேற்றம் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்கள்மற்றும்உயர்ஆணையர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான நிகழ்வு திங்கட்கிழமை இரவு நடைபெற்றபோது உரையாற்றிய அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஏப். 25 நாடாளுமன்றில் முன்வைப்பு

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன் றத்தில் சமர்ப்பிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நேற்று தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்துக்கான இரண்டாவது வார நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஏப்ரல் 25 தொடங்குகின்றது.

இதன்போதே பயங் கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் முதலாம் வாசிப்புக்கெனநாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படவுள்ளது.

இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பெரும்பாலான தரப்புக்கள் போர்க்கொடிதூக்கியுள்ளபோதும்அதனை முன்வைப்பதில் ஆட்சியாளர்கள்திட்டவட்டமாகஉள்ளனர். (02)



## இது ரகசியம் அல்ல!

ஜனநாயகத்தைப் பதுக்கி வைத்துக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டணி என்ன செய்கிறது? தேர்தல் அறிவித்தால் சிலிர்த்துக்கொண்டு எழுந்தவர்கள் தேர்தல் நடக்காதுஎன்றுதெரிந்தவுடன்காற்றுப்போன பலூன் போன்றாகிவிட்டார்கள். கதை அவ்வளவுதானா என்று விசாரித்துப் பார்த்ததில் சில சுவாரஸியமான தகவல்கள் கிட்டின. அவற்றைத்தான் இன்றைக்கு உங்களோடு பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

தாங்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று கூறிக்கொண்டு 5 கட்சிகளைக் கொண்டு தொடங்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகள் தங்கள் தங்கள் சொந்தக் கட்சிகளைப் பலப்படுத்துவதில் மும்முரமாக இருக்கின்றன.

புளொட் தனது முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபனை முன்னிலைப்படுத்தி கட்சிக் கட்டமைப்புக்களை

2

## ஐ.நா. செயற்பாடுகளுக்கு இலங்கை பங்களிக்குமாம்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் செயற்பாடுகளுக்கு இலங்கை பங்களிப்பை வழங்குவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன,

இலங்கையின் தற்போதைய பொருதாதர நிலைமை மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்குதெளிவுபடுத்துவதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச அரசியல் நகர்வுகளின் மீளாய்வு செயற்பாடுகளில் இந்த ஆட்சி ஈடுபட்டுள்ளதோடு, அதனுடன் இணைந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற 25 - 30 வரையிலான அரச நிறுவனங்களிடமிருந்து அது தொடர்பிலான தகவல்கள் பெற்றுக்

2

## மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு; ஒருவர் கைது

வேலிக்குபாய்ச்சியமின்சாரத்தில் சிக்கி இளைஞன் உயிரிழந்தமை தொடர்பில் வவு னியாப் பொலிஸாரால் காணி உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குபதில் நீதிவான் தி.திருஅருள் செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிட்டிருந்தார்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் தொடர் யானைகள், பன்றிகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்குள்ள தோட்டக் காணி ஒன் றுக்கு வேலி போடப்பட்டு,மின்சாரம்வழங்கப்பட்டிருந்தது. குறித்த வேலிக்கு வீட்டில் இருந்து முறையற்ற வகையில் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில்மரம் வெட்டுவதற்காக குறித்த வேலி ஊடாக சென்ற இளைஞன் மின்சாரம் தாக்கியதில்சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கனராயன்குளம், குறிசுட்டகுளம்

# ஐ.எம்.எப். கடன் வசதி தொடர்பில் ஏப்ரல் 25 நாடாளுமன்ற விவாதம்

### ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

- அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குமா இல்லையா என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கலாம்
- தொழிற்சங்கங்கள் போராட்டங்களின் பெயரால் நாட்டை சீர்குலைக்க முயற்சி
- புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தவும் எதிர்பார்ப்பு
- ஜூன் முதல் சமூக நலன்புரி நன்மைகள் வழங்கும் பணிகள் தொடங்கும்

(தன்வீன்)

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதித்திட்டத்தை ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள நிலையில் அது ஏப்ரல் 25 முதல் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கையின்தற்போதையபொருதாதர நிலைமை மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஆணையர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான நிகழ்வு திங்கட்கிழமை இரவு நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதார மீட்சி

2

## ஹெரோயின் குற்றச்சாட்டில் பெண் கைது

யாழ்ப்பாணம்ஓட்டுமடம்-பொம்மைவெளியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 5.5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 70 ஆயிரம்ரூபாய்பணம்என்பனகைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித் தனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி 5ஆம் குறுக்குத்தெ ருவைச் சேர்ந்த 32 வயது பெண்ணே கைது செய்யப் பட்டார்.

உயிர்க்கொல்லி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவதாக நீண்ட நாள்களாக தேடப்பட்டு வந்த பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

## மக்களின் உரிமையைப் பறிக்கும் சட்டத்துக்கு இணங்கவேமாட்டோம்

### மொட்டுக் கட்சி திட்டவட்டம்

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் எந்தவொருசட்டமூலத்துக்கும் அல்லதுசட்டத்துக்கும்இணங்கப்போவதில்லை என்று ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன தெரிவித்துள்ளது. அதன் பொதுச்செயலாளர் சட்டத்தரணிசாகரகாரியவசம்எம்.பி. நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைக் கூறினார்.பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, பயங்கரவாதத்தின் சில வரையறை கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்க



வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (02)

## தொலைக்காட்சி, வானொலிகளையும் கட்டுப்படுத்த புதிய சட்டம் விரைவில்

### சமூக ஊடகங்களுக்கும் கிடுக்கிப்பிடி வரும்

தொலைக்காட்சி,வானொலிகளை கட்டுப்படுதுவற்கு புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள், மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் சிறைக் கைதிகளின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியை திறந்து வைத்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஒளிபரப்பு அதிகாரசபைச்சட்டமூலமொன்றைக் கொண்டுவருவதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டு வருகின்றோம். காரணம், தற்போது நடைமுறையில் உள்ள சட்ட ஏற்படுகள் போதுமானவையாக இருக்கவில்லை.

தற்போதுதொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளுக்கான அனுமதியைவழங்குவத்குதொலைக்காட்சி சட்டம், வானொலிக் கூட்டுத்தாபனச் சட்டம் ஆகியனவே உள்ளன.

பொதுவானசட்டமொன்று தற்போது காணப்படவில்லை. இதனால்புதியசட்டமொன்றை நாம்தயாரித்துவருகின்றோம். இந்தச் சட்டமானது சமூக ஊடகங்கள்உட்படஅனைத்து ஊடகங்களுக்கும் பொதுப்படையாக வருவதற்கே அதிகளவு சாத்தியமுள்ளது - என்றார்.

## மீசாலையில் அலவாங்கினால் குத்தி நோயாளர் பராமரிப்பாளர் கொலை

### 20 வயது இளைஞன் கைது



சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை, புத்தூர்ச்சந்தியில்செவ்வாய்க்கிழமை மாலை அலவாங்கால் குத்தி ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொலை தொடர்பான சந்தேகத்தில் 20 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் தெல்லிப்பளை வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்தவரான நாகராஜாஎன்றுஅடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் அமைச்சர் அலி சப்ரிக்கும் பிணக்குண்டு

புதியபயங்கரவாதஎதிர்ப்புச் சட்ட மூலத்தில் உள்ள விடயங்கள் தொடர்பில் தனக்குமுழுமையானஉடன்பாடுகள்இல்லைஎன்றுவெளிவிவகாரஅமைச்சர்ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

தனியார்தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில்உள்ள விடயங்கள்சிலவற்றைநான் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை அமைச்சரவைக் கூட்டத்திலும் தெரிவித்துவிட்டேன்.

குறிப்பாக,பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஒருவருக்கு வழங்கப்படுகின்றஅதிகாரம்தொடர்பில் எனக்கு பிரச்சினைகள் உள்ளன. குறித்த அதிகாரத்தினை விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சரிடத்திலோ அல்லது பாதுகாப்புச் செயலாளர் இடத்திலோதான் வழங்கவேண்டும்.



ஆனால் இங்கு பிரதிப் பொலிஸ்மாஅதிபருக்குவழங்கப்படுகின்றது. இதுதவாறான அணுகுமுறை. இதனை நான் மிகத்தெளிவாகக் கூறியுள்ளேன்.

அதேபோன்று, வர்த்தமானி அறிவித்தலில் வெளிப்பிடப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணம் பரந்து பட்டதாக இல்லை. அதுடன் அதன் பிரகாரம் குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தவறாக பயன்படுத்துவற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

அந்த வகையில் குறித்த சட்டமூலத்தினை மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கும் அதுபற்றி மேலும் கலந்துரையாடுவதற்கும்தயாராகவே உள்ளோம் - என்றார்.

## ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு ட்ரான்ஸ்பரன்ஸி அமைப்பு வரவேற்பு

ஊழல் எதிர்ப்பு சட்ட மூலத்தினை வரவேற்கும் அதேவேளை முக்கிய இரு விடயங்கள் தொடர்பில் கரிசனை கொள்வதாக லஞ்ச, ஊழல்கண்காணிப்புஅமைப்பான ட்ரான்பெரன்சி இன்டர் நஷனல் தெரிவித்துள்ளது.

பரிந்துரைக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புச் சட்டமூலமானது, அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிலையில் விரைவில் நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் நீதி அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊழல் எதிர்ப்புச் சட்டமூலமானது இலஞ்ச ஒழிப்புச் சட்டம் (அத்தியாயம் 26), 1994ஆம் ஆண்டின் 19இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய முறைப்பாடுகளைபுலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவை உருவாக்குதல் சட்டம் மற்றும் 1975ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும்பொறுப்புக்கள்வெளிப்படுத்தல் சட்டம் என்பவற்றிற்கு மாற்றீடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் தமது நிறுவனம் உட்படப் பல்வேறு பங்குதாரர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள், யோசனைகள் மற்றும் அவதானிப்புக்களை இச்சட்டமூலம் உள்வாங்கித் தயாரிக்கப்பட்டுள்ளதாக ட்ரான்ஸ்பரன்ஸி அமைப்புத் தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று அந்த அமைப்பின் சார்பில் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கையில் தற்பொழுது காணப்படும் ஊழல் எதிர்ப்புச்சட்டக்கட்டமைப்பை மேலும் மேம்படுத்த உதவும் பலபாராட்டத்தக்கவிடயங்கள் புதிய சட்டமூலத்தில் உள்ளடக்கியுள்ளன.

தனியார் துறை சார்ந்த ஊழல் விடயங்கள் உட்பட, பாலியல் இலஞ்சம் சார்ந்த ஊழல்கள் மற்றும் விளையாட்டுநிகழ்வுகள்தொடர்பான ஊழல் குற்றங்கள் போன்ற பலவும் இதில் உள்ளடங்கப்பட்டுள்ளமுக்கிய மாற்றங்களாகும். மேலும் இச்சட்டமூலமானது

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கிப் பலப்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. கட்சியின் அடுத்ததலைவராககஜீபனை வளர்ப்பதற்கு சித்தார்த்தன் முற்படுகின்றார் என்கிற முணுமுணுப்புக்கள் கட்சிக்குள் இருந்தாலும் இந்த விடயத்தில் கஜீபனிடம் முழுப்பொறுப்புக்களும்ஒப்படைக்கப்பட்டு பணிகள் முழுவேகத்தில் நடக்கின்றன.

மற்றொருபுறத்தில் கூட்டணிக்குள்தாமேபெரிய கட்சி, மூன்றுநாடாளுமன்றப் பதவிகள் மற்றும் கூட்டமைப்பின் ஸ்தாபக உறுப்பினராக இருந்து இன்று வரைக்கும் தொடரும் கட்சி என்கிற முன்னுரிமைகளின் அடிப்படையில்சட்டாம்பியாக - நாட்டாமையாக - இயங்குவதற்கு முற்படும் ரெலோ தனிஸ்டப்படி நடக்க முற்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு எங்கே இப்படி ஒவ்வொரு கட்சியும் தனித் தனியே சென்றால் கூட்டணி காணாமற்போய் விடுமோ என்கிற அச்சத் தில் ஈபிஆர்எல்எவ், கூட்டணியின் கட்டமைப்பைப் பலப்படுத்தவேண்டும்அதற் கான அடிப்படைக் கட்டமைப்புகள் உருவாக்கப்படவேண்டும் என்று புலம்புகின்றது.

முன்னாள் போராளிகள் கட்சியான ஜனநாயகப் போராளிகள் கட்சி கூட்டணிக்குள் இருக்கிறதா இல்லையா என்பதே தெரியவில்லையாம். அவர்கள் என்ன செய்கிறார்கள் ஏன் கூட்டணிக்குள் வந்தார்கள் என்பதேபுரிபடாமல்மற்றைய கட்சிக்காரர்கள் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

இந்த நிலையில் கூட்டணியை ஒழுங்குபடுத்திஏற்கனவே இணங்கிக் கொண்டது போன்று ஒரு சுழற்சித் தலைமையை உருவாக்கிக்கொள்வதற்கான முதற்படியாக கூட்டணியின் தலைவர், செயலாளர், பொருளாளரைத் தெரிவு செய்வதற்கான ஒரு கூட்டத்தை கடந்த வாரம் கூட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சித் தலைவரான சட்டத்த ரணி சிறீகாந்தாவே இதற் கான முன்னெடுப்பை மேற் கொண்டார். ஈபிஆர்எல்எவ். இதற்கு முழுமையாகத் துணை நின்றது. தலைவர்களுக்கு எல்லாம் அறிவிக் கப்பட்டு நாள் குறிக்கப்பட்டது. இந்தக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்படுபவர் ரெலோவின் சுரேன் குருசாமி. அவரூடாகவே கூட்டத்திற்கான ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டது.

கடைசியில் கூட்ட நாள் வந்தபோது அவசரமாகத் திருகோணமலைக்குச் செல்லவேண்டியிருப்பதாகக் கூறிக்கொண்டு செல்வம் அடைக்கலநாதன் வரவில்லை. புளொட் தலைவர் சித்தார்த்தனின் அலைபேசிக்கு எடுக்கப்பட்ட பல அழைப்புக்களுக்குப் பதிலே இல்லை. இந்த நிலையில் கூட்டம் எந்த முக்கிய முடிவும் எடுக்கப்படாமல் சும்மா கூடிக் கலைந்துள்ளது.

ஜனநாயகக்கூட்டணிக்கு சுழற்சிமுறையில் தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டாலும் யார் அதன் முதலாவது தலைவர் என்பதில் அவர்களுக்கு இடையில்ஒருஇணக்கப்பாடும் இல்லை. தாங்களேதற்போது கூட்டமைப்பு என்று உரிமை கோருவதால், கூட்டமைப்பில் தொடக்கம் முதல் இன்றுவரைக்கும்தொடர்ந்து இருக்கும் கட்சி என்கிற வகையிலும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற வகையிலும் பங்காளிகளுக்குள் தாமே பெரியவர் என்கிறஎண்ணம்ரெலோவிடம் இருக்கின்றது. அதனால் முதலாவது தலைவர் பதவி தமக்குவழங்கப்படவேண்டும் என்கிற எதிர்பார்ப்பு அந்தக் கட்சியிடம் இருக்கின்றது. ஆனால்,இதில்சித்தார்த்தனோ, சுரேஸ் பிரேமச்சந்திரனோ இதுவரை வெளிப்படையான உடன்பாட்டைத் தெரிவிக்கவில்லை. மற்றொருபுறத்தில் சிறீகாந்தா, ரெலோவிற்குள் செல்வம்அடைக்கலநாதனின் தலைமைத்துவம்பிடிக்காமல் வெளியேறியவர். அவரைவிட வயதிலும் அறிவிலும் அனுபவத்திலும் மூத்தவர். தமிழர் அரசியலிலும்பழுத்த அனுபவசாலி. ரெலோவிலும் இருந்தவர். எனவே அவரும் தலைமைப் பதவிக்குப் பொருத்தமானவர் என்கிற எதிர்பார்ப்பும் உண்டு.

இந்த நிலையில்தான் தலைவரைத் தெரிவதற்காக சிறிகாந்தாவின் முன்னெடுப்பில்கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் சித்தார்த்தனும்அடைக்லநாதனும் தவிர்த்திருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஒரு தலைவர் இருந்தது கிடையாது. இன்னும்சொல்லப் போனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கென்று ஒரு கட்டமைப்பே இருந்தது கிடையாது. தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றநாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவே கூட்டமைப்புஎன்பதாகஅர்த்தப் படுத்தப்பட்டது. அந்தநாடாளுமன்றக் குழுவின் தலைவராக இருந்தவரான இரா.சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராகவும் அங்கீகரிக்கப்பட்டுச் செயற்பட்டார். அதைத் தாண்டி கூட்ட மைப்புக்குள் எந்தப் பதவியும்இருந்ததில்லை. சில காலத்திற்கு முன்னர் ரெலோ தன்பாட்டில் இணைத் தலைவர் என்று செல்வத்தைக் குறிப்பிடத்தொடங்கியது.அந்தக் கூட்டமைப்புத்தான்இப்போதும் தொடர்கின்றது என்றால் செல்வம்தான் இப்போதும் ஜனநாயகக்கூட்டணிக்கும் தலைவர். மற்றைய கட்சியினர் எல்லோரும் ரெலோவின் பின்னால் வந்து ஒட்டிக்கொண்டவர்கள் என்பதுதானே!

ஆகமொத்தத்தில்சுழற்சித் தலைமையாக இருந்தாலும் முதலாவது தலைவர் யார் என்பதில் கூட்டணிக்குள் தொடர்ந்தும் இழுபறி இருக்கத்தான் போகிறது என்பது தெளிவாகிறது. ஒருவேளை ஒகஸ்டில் உள்ளூராட்சித் தேர்தலை ரணில் அறிவித்தால் அவசர அவசரமாக இதற்கொரு முடிவைக் காண்பார்களோ என்னவோ!பொறுத்திருப்போம் வாசகர்களே!

**இடிமின்னல்**

## மின்சாரம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய உலகநாதன் கஜந்தன் என்று அடையாளம் காணப்பட்டார்.

குறித்த பகுதியில் மரம் வெட்டுவதற்காக உயிரிழந்த இளைஞரும் வேறு சிலரும் சென்ற போது குறித்த காணி உரிமையாளரிடம் வேலிக்கு மின்சாரம் செலுத்தப்பட்டுள்ளதா எனக் கேட்டதாகவும், அவர் இல்லை எனத் தெரிவித்த

நிலையிலேயே குறித்த இளைஞன்வேலியைக்கடக்க முற்பட்டார்என்றும்அப்போதே அவர் மின்சாரத்தால் தாக்குண்டார்என்றும்பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கனராயன்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் வவுனியா நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான்தி.திருஅருள்சம்பவ இடத்திற்குசென்றுநிலமையை பார்வையிட்டதுடன், இது தொடர் பான முழுமையான விசாரணைக்கும் உத்தரவிட்டார்.

உடற்கூறாய்வின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. முறையற்ற வகையில் மின்சாரம் செலுத்தியமை தொடர்பில் காணி உரிமையாளர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுவவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. மின்சார சபையால் குறித்த வீட்டுக்கான மின் இணைப்புதுண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கனகராயன்குளம் பொலிசார் தெரிவித்தனர்.

## ஐ.எம்.எப். .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நிலையான வளர்ச்சிக்கான கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தத்தின் இந்தக் கடினமான மற்றும் இலட்சியத் திட்டத்தை நாங்கள் தொடங்கியுள்ளோம். அதற்கு எமக்கு மிகக் குறைவான தெரிவுகளே எஞ்சியிருந்ததோடு, அதற்கான வலுவான முயற்சியாகஇந்தத்தொடக்கத்தைக் கருதலாம்.

இந்த வேலைத்திட்டம் நிதி மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை, குறிப்பாக நிதி சீர்திருத்தம், இலங்கையரின்மீட்சிமற்றும் நிலையான வளர்ச்சிக்கு முக்கியமாகும். நல்லிணக்க செயல்முறை போன்ற விடயங்களையும் அது உள்ளடக்கியுள்ளது. இதுவரிக் கொள்கைநடவடிக்கைகளை உள்ளடக்கிய வருமான அடிப்படையிலானநிதிஒருங்கிணைப்பை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. அவற்றில் பெரும்பாலானவை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

சர்வதேசநாணயநிதியத்தின் திட்டத்தை மீளாய்வு செய்யும் போது, செப்டெம்பர் மாதத்தில்நாம்மறுபரிசீலனை செய்ய வேண்டிய மேலும் பல விடயங்கள் உள்ளன. உதாரணமாகக்கூறுவதாயின், ஜனவரி மாதத்தில் கலால் வரி 20சவீதத்தினால் அதிகரிக்கப்பட்டபோது, சட்டப்பூர்வ கொள்முதல் குறைந்ததாலும், சட்டவிரோதநடவடிக்கைகள் அதிகரித்ததாலும் எதிர்பார்த்தவருமானம்கிடைக்கவில்லை. 2025ஆம் ஆண்டில் எதிர் பார்க்கப்படும் வரி மற்றும் மொத்த தேசிய உற்பத்தி வீதம் 14 சதவீதமாக காணப்படுகின்றது. அது கடினமான இலக்காக இருப்பினும் அதனை அடைய முடியும்.

வருமான நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் செலவினங்களைச் சீரமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதிய அரச நிதி முகா'மைத்துவச் சட்டத்தை உருவாக்குவது, அரச கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பது மற்றும் ஊழலைக் குறைக்கும்போது, நிதி உறுதிப்பாட்டை உறுதிசெய்வதற்கான அடிப்படை நிதிக்கையிருப்பை மீண்டும் அதிகரிப்பது ஆகியவற்றை உள்ளடக்கிய அரச நிதிக் கொள்கைச் செயற்பாடுகள், சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் கீழ் பலப்படுத்தப்படுகிறது.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்திவங்கியின் திட்டங்கள் கட்டமைப்பு சீர்திருத்த திட்டத்தின் ஒரு பகுதியாகும், மேலும் அவை சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் சில நடவடிக்கைகளை வலுப்படுத்துகின்றன.. உலக வங்கித் திட்டத்தின் கீழ், நிதிக் கண்காணிப்பு மற்றும் கடன் முகாமைத்துவத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அது இரண்டு படிகளை உள்ளடக்கியது. அதிலொன்று நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலக சட்டத்தின் மூலம் நாடாளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தை நிறுவுவது. 2023 மே மாதத்திற்குள் வரவு, செலவுத்திட்ட அலுவலகத்தை செயல்படுத்த நாம் எதிர்பார்க்கிறோம்.

இது குறித்து, மக்களைத் தெளிவுபடுத்த கட்டாய கால அவகாசம்வழங்கப்படவுள்ளது. அதன்பின்,நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அரசநிதிக் குழுவுக்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இது நாடாளுமன்றத்தில் பின்பற்றப்பட வேண்டிய ஒரு செயல்முறையாகும். இது ஏப்ரல் 17ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு ஏப்ரல் 25முதல் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், தற்போது சட்டத்தின் கீழ் உள்ளடங்காதபகுதிகள்உட்பட பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கியபுதிய அரசகடன் முகாமைத்துவச் சட்டமொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. மறுசீரமைப்பு மற்றும் வணிகமயமாக்கப்படும்அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு இறையாண்மை உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற செயல்முறைகள் இதில் அடங்கும். ஏற்கனவே நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டாய வருமான வரி சட்டத்துடன் வரி நிர்வாகத்தை மேம்படுத்துவதையும் 2024 முதல் காலாண்டில் வரி கணக்காய்வுமற்றும்இணக்கத்தை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்துவதும் இதன் நோக்கமாகும்.

நிதித்துறையின் உறுதிப்பாட்டைப் பாதுகாக்கவும், தனியார் துறைக்கான கடன் ஓட்டத்தை மீட்டெடுக் கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அவசர பணப்புழக்கஉதவிஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. நிதித் துறை நெருக்கடி முகாமைத் துவத்திற்கு குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. வங்கி விசேட ஏற்பாடுகள் சட்டம் வேகமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி திட்டத்தில்தாமதம்ஏற்படுவதை தவிர்க்க ஏப்ரல் மாத இறுதிக்குள் பாராளுமன்றத்தின் அனுமதியைப்பெறவேண்டும். அரசநிறுவனங்களின்வணிக செயல்திறன், நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் தனியார் துறை பங்கேற்பை மேம்படுத்த, பொது தனியார் கூட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, பொது நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படுகின்றன.

வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கையின் நிச்சயமற்ற தன்மையைக் குறைக்கவும் போட்டித் தன்மையை அதிகரிக்கவும் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில்அமுல்படுத்திய சுங்கவரிகளைபடிப்படியாகக் குறைக்கஎதிர்பார்க்கப்படுகிறது. வருவாய் சமநிலைமையை உறுதி செய்வதற்காக வரி சீராக்கல்மேற்கொள்ளப்படும். மேலும் அமுலாக்கப்பட்ட சுங்கவரிகளினால் ஏற்படும் இழப்புகளை ஈடுகட்ட இந்த சீராக்கலினால் கிடைக்கும் வருமானம்குறித்துகவனத்தில் கொள்ளப்படும்.

இந்த ஆண்டின் நான்காவது காலாண்டில், ஒருங்கிணைந்த முதலீட்டுச் சட்டம் செயற்படுத்தப்படும், மேலும் வறியவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தரப்பினர்களின் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்த வேண்டும். சமூக பாதுகாப்பு நிறுவனங்களை வலுப்படுத்துதல், விநியோக முறைகளை மேம்படுத்துதல் மற்றும் சரியான இலக்கை உறுதி செய்தல் ஆகியவை இதில் அடங்கும்.

அந்த இலக்குகளை அடைவதற்காக முதல் நடவடிக்கையாக அதிகாரிகளின் எதிர்ப்பால் சவாலான ஆவணங்களை புதுப்பிக்க வேண்டும்என அடையாளங் காணப்பட்டுள்ளது. தகுதியான பயனாளிகளின் விவரங்கள் மற்றும் புகைப்படங்கள் திரட்டப்பட்டு, குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தெரிவு செய்வதற்காக ஒரு குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். புதிய நலன்புரி உதவித்தொகை செலுத்தும் முறைக்கான விதிமுறைகள் அமைச் சரவையில் நிறைவேற்றிய பின்னர், பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்குவது ஜூன் 1ஆம் திகதி முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உலக வங்கி திட்டம் முதன்மையாக பொருளாதார ஸ்திரத்தன்மையில் கவனம் செலுத்துகிறது, அதேசமயம் ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டம் மின்சாரம் மற்றும் நீர் துறைகளில் சீர்திருத்த திட்டங்களையும்நிலையான சுற்றுலா மற்றும் நகர்ப்புற மேம்பாடு என்பவற்றையும் ஆதரிக்கிறது. இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு, நல்லிணக்க வேலைத்திட்டம் மிகவும் முக்கியமானது.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை அறிமுகப் படுத்தவும்எதிர்பார்க்கிறோம். பொதுமக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. கடன் நிலைத்தன்மைக்கு அமைவாக மேலதிக சர்வதேச நிதித் திட்டங்கள் இன்றி எதிர்காலதிட்டங்களுக்குஅரசு தலைமையிலான கொள்கை பொறிமுறை ஒன்றை தேசிய திட்டமிடல்திணைக்களத்தின் ஊடாக செயல்படுத்துவோம்.

சட்டம் ஒழுங்கை வலுப்படுத்தும்அதேவேளைதொழிற் சங்கங்கள் என்ற போர்வையில்மேற்கொள்ளப்படும்நியாயமற்ற மற்றும் சீர்குலைக்கும்செயல்களை அனுமதிக்க மாட்டோம். அரசு நிறுவனங்களைமறுசீரமைக்கமக்களின் ஆதரவுடன் செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

## மீசாலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

மீசாலையைச் சேர்ந்த 20வயது இளைஞர் இரண்டு மாதங்களாக தெல்லிப்பளை வைத்தியசாலையில் தங்கி மனநல சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அங்கிருந்துதப்பியோடிய அவர் செவ்வாய்க்கிழமை தான்வசித்தபுத்தூர்ச்சந்தியில் உள்ள வீட்டுக்கு வந்துள்ளார். அங்குஅவர்உறவினர்களோடு முரண் பட்டு பிரச்சினையில் ஈடுபட் டுள்ளார்.

இது பற்றித் தகவல் அறிந்த, வைத்தியசாலையில் இளைஞரைப் பராமரிப்பதற்காக அவரோடு இருந்த நோயாளர் நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த நாகராஜா (வயது 48) இளைஞரை மீண்டும்வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளார். அவரோடு இளைஞரின் உறவினர் ஒருவரும் வந்துள்ளார்.

தொடருந்து தண்டவாளத்தில் அமர்ந்திருந்த இளைஞரோடு நலன்புரிச்சங்க பராமரிப்பாளர் உரையாடியபடி இளைஞனின்வீட்டுக்குச்சென்றுள்ளார். இதன்போது இளைஞரின் உறவினர் முச்சக்கர வண்டியோடு வீதியோரத்தில் கருத்திருந்துள்ளார்.

வீட்டுக்குள் இருந்து இளைஞர் மட்டும் வெளியே வந்து மீண்டும் தொடருந்துத் தண்டவாளத்தில் அமர்ந்ததைப் பார்த்த உறவினர் நாகராஜாவின் அலைபேசிக்குப்பலதடவைகள்அழைப் பெடுத்துப் பார்த்துள்ளார். பதில் இல்லை. இதையடுத்து அந்த உறவினர் தொடருந்துத் தடத்தில் அமர்ந்திருந்த இளைஞரிடம் சென்று வினவியுள்ளார்.

வீட்டு முற்றத்தில் நாகராஜாவை அலவாங்கால் குத்தி கொலைசெய்துவிட்டேன்என இளைஞர் பதிலளித்துள்ளார். உறவினர்வீட்டுமுற்றத்திற்குச் சென்றுபார்த்தபோதுநாகராஜா முகத்தில்பலத்தகாயங்களோடு கிழே வீழ்ந்து கிடந்துள்ளார் - என்றனர்.

உறவினர் சாவகச்சேரி பொலிஸாருக்கு உடன் தகவல் தந்தார். பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து நாகராஜா இறந்துபோனதை உறுதி செய்ததுடன் இளைஞரை கைது செய்தனர். நாகராஜாவின் உடல் கூறாய்வுகளுக்காக நேற்றிரவு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## பொறுப்புக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடியானகாலத்தில் இலங்கைக்குக் கடனுதவி வழங்கியவர்களுக்கு நன்றி. நல்லிணக்க வேலைத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து இனக்குழுக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதோடு, உறுதிப் பாட்டைஉருவாக்கி, பொருளாதாரத்தை பலப்படுத்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும்.

நல்லிணக்க நோக்கங்களுக்காக 3 அத்தியாயங்களின் கீழ் ஆட்சியாளர்களின் தேசிய நல்லிணக்கம் தொடர்பாக அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அதன் முதல் அத்தியாயமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி நாடாளுமன்றத்தின் ஏனைய கட்சிகளின் ஆதரவினைபெற்று,அனைத்து இலங்கையர்களுக்கும் கிடைக்க வேண்டிய கௌரவம் தொடர்பான விரிவான இணக்கப்பாட்டினை எட்டுவதாகும்.

அடுத்த கட்டமாக, நீண்ட காலமாக தடுத்து வைக்கப் பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கைதிகளை விடுதலை செய்தல், அவர்களின் வழக்கு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது. சர்வதேசதரத்திற்குஅமைவாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசிப்பதாகும்.

பொறுப்புக்கூறல் செயற்பாடுகளுக்காக உண்மையை கண்டறிவதற்கான உள்ளகபொறிமுறைஒன்றை நிறுவுவதே இதன் மூன்றாம் அத்தியாயமாகும். அத்துடன், உண்மைமற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளநிலையில்,தென்ஆபிரிக்காவின்அனுபவங்கள்குறித்து ஆராயவும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது - என்றார்.

## ஊழல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த குற்றங்களுக்கு விதிக்கும் அபராதத்தையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள சொத்து அறிவிப்பு முறைமையில், ஒருமத்திய அதிகாரம் கொண்டஅமைப்பாகஇலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்புலனாய்வு செய்வதற்கானஆணைக்குழு காணப்படும். அங்கே, சொத்து மற்றும்பொறுப்புக்கள்பற்றிய அனைத்து அறிவிப்புக்களும் சமர்ப்பிக்கப்படுதல்வேண்டும். சில முக்கியமான தகவல்கள் திருத்தப்பட்டு இலத்திரனியல் முறைமையூடாக சொத்து மற்றும்பொறுப்புக்கள்பற்றிய பிரகடனங்கள்பொதுவெளியில் கிடைக்கப்பெறும்.

இந்தச் சட்டம் பொருந்தக்கூடிய தனிநபர்களின் சட்டவிரோத செறிவூட்டல் தொடர்பான விடயங்களை இந்த இலத்திரனியல் முறைமையூடாக மக்களினால் அடையாளம் காண முடியும். தற்போதைய சட்டத்தை போலின்றி, இந்த முன்மொழியப்பட்ட சட்டமூலமானது ஜனாதிபதியின் சொத்து மற்றும் பொறுப்புக்கள்பற்றிய விவரங்களையும் கூடப் பிரகடனப்படுத்துமாறு கோருகிறது.

எவ்வாறாயினும், எமது நிறுவனமானது இந்த முன்மொழியப்பட்டுள்ள சட்டத்தில் முக்கிய இரண்டு விடயங்கள் தொடர்பில் கரிசனை கொள்கிறது. இச் சட்டமானது தகவல் அறியும் உரிமைச் சட்டம் உட்பட மற்ற அனைத்து எழுதப்பட்ட சட்டங்களையும் மீற முற்படுகிறது. முன்மொழியப்பட்ட சட்டத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகள் இரகசிய பாதுகாப்பு/காப்பு பிரமாணத்தில்கையெழுத்திட வேண்டிய பிரிவுகள் காணப்படுகின்றன.

ஆகவே, புதிய சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தகவல்களை வெளியிடுவது ஆணைக்குழுவின் சிறப்பு அனுமதியுடன் மாத்திரமே சாத்தியமாகும்.

எனவே, இம்முன்மொழியப்பட்ட சட்ட ஏற்பாட்டின் அடிப்படையில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடமிருந்து தகவல்களை அணுகுவது மிகவும் கடினம். அதன் மூலம் இரகசிய கலாசாரம் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும்குறித்தசட்டமூலத்தில் கூறப்பட்டுள்ள 'ஆட்சியில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல்' எனும் நோக்கமும்மறுக்கப்படுகிறது.

இரண்டாவதாக, தவறான குற்றச்சாட்டுகளை குறிக்கும் இந்தச் சட்டமூலத்தின் பிரிவு 119,, ஊழல் தொடர்பில் தகவல் வழங்க விரும்பும் பொதுமக்களுக்கும் முறைக் கேடுகளை வெளிப்படுத்தும் நபர்களுக்கும்எதிர்மறையான சமிக்ஞையை தோற்றுவிக்கக்கூடும். தற்போதைய சட்டத்திலும் காணப்படுகின்ற அதே சட்ட ஏற்பாடானது ஊழலுக்குஎதிராகச்செயற்படும் நபர்களைகுறிவைத்துதவறாக பயன்படுத்தப்படவில்லை என்றாலும், அரசியல் ரீதியாக செல்வாக்கு செலுத்தும் பொதுச்சேவையின் பின்னணியில் அல்லது ஜனநாயகம் வலுவிழந்தநிலையில்அல்லது பலவீனமானஆட்சிமுறைமை அல்லதுஊழல்மிக்கவர்களின் ஆட்சி போன்ற பாதகமான சூழ்நிலையில் இந்த சட்ட ஏற்பாடானது தீவிர எதிர் விளைவு மற்றும் ஆபத்துக் கூடியதாக மாறும்.

குடிமக்களின் கருத்துச் சுதந்திரத்திற்காகத் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும்ஓர் அமைப்பு என்ற அடிப்படையில் எமது நிறுவனமானது, இந்த முன்மொழியப்பட்ட சட்டமூலம் மிகவும் வலுவானதாக அமைய வேண்டுமெனக் கருதும் அதேவேளை, ஊழல் தொடர்பில் தகவல் வழங்க விரும்பும்பொதுமக்களுக்கும் முறைக்கேடுகளை வெளிப்படுத்தும்நபர்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தாது ஊழல் தொடர்பில் முறையிட ஊக்குவிக்க வேண்டும்

இலங்கையிலிருந்து ஊழலை ஒழிப்பதற்கும் நிலையான பொருளாதாரத்தினைமேம்படுத்துவதற்கும் நாட்டின் குடிமக்கள், துறைசார் வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூகத்துடன் இணைந்து செயல்பட ஒன்றிணையுமாறு ட்ரான்ஸ்பரன்ஸி அமைப்பானது ஆட்சியாளர்களுக்குஅழைப்புவிடுகிறது - என்று தெரிவிக்கப்பட்டது.

## ஐ.நா. .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டுள்ளதோடு, மேற்படிஉள்ளகசெயற்பாட்டின் பயனாக 294 பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவற்றில் எந்தப் பரிந்துரையைநடைமுறைப்படுத்தி, முன்னேற்றமடைய முடியும் என்பது தொடர்பில் நாம் ஆராய்து வருகிறோம். அதேபோல் மேற்படி பரிந்துரைகளை தற்போதும் உரிய அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

சர்வதேச அரசியல் நகர்வுகளின் மீளாய்விற்கு மேலதிகமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 52ஆவது அமர்வு மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பிலான சர்வதேச சமவாயத்தின் கீழான செயற்பாடுகளுக்கும் இலங்கை பங்களிப்பினை வழங்கியுள்ளது.

பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான வேறுபாடுகளையும்ஒழிப்பதற்கான அமைப்பின் கீழ் 9 வருடாந்த மீளாய்விலும் இம்முறை பங்குபற்றவுள்ள அதேநேரம், பொதுநலவாய நாடுகளின் அமைப்புக்குள் வெளிநாடுகளிலிருக்கும் இலங்கையர்களுக்கானஒன்றியம்ஒன்றை நிறுவுவது தொடர்பிலான பணிகளும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலகத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முழுமையான பொருளாதார மீட்சி மற்றும் மீள்கட்டமைப்புக்களுடன்முன்னோக்கிச் செல்லவும் பரிந்துரைகள் அடிப்படையிலான முன்னேற்றங்களைஏற்படுத்தவும் வலுவான உள்ளகச் செயற்பாடுகளிலும் இலங்கை அர்பணிப்புடன்ஈடுபடவுள்ளது -என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச நாணய நிதியத்தின் நேரடி கண்காணிப்புவேண்டும்

## ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை



அம்பாந்தோட்டைமாவட்டத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் அபிவிருத்தி பணிகளை ஐந்து வெளிநாட்டுநிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஐந்து நிறுவனங்களில் நான்கு நிறுவனங்கள் நட்டமடைந்துள்ளதுடன் எரிபொருள் துறையில் சிறந்த புலமையும் கிடையாது. நட்டமடைந்துள்ள அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் விவகாரம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் கண்காணிப்பை முன்னெடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாவலபகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் தொடர் பில் பல விமர்சனங்கள் காணப்படுகின்ற நிலையில் ஒருசில ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக செயற்படுகின்றன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ரோஹினிமாரசிங்கசிறந்தமுறையில் செயற்படுகிறார். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிடுவதால் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஊடாக ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிரான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கைபொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இவ்வாறான நிலைதான் ஏற்பட்டது.

எல்லையற்ற ஊழல் மோசடி பொருளாதார பாதிப்புக்கு பிரதான காரணியாக உள்ளது என சர்வதேச நாணய நிதியம் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளில் அரசியல் அழுத்தம் காணப்படும்போது சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகள் எவ்வாறு செயற்படுத்தப்படும். அரசநிர்வாகத்தில் எவ்வாறு வெளிப்படைத் தன்மை பேணப்படும்.

விவசாயத்துறை மேம்பாட்டுக்காக நிதி உதவி வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. நிதி உதவி தொடர்பான கணக்காய்வு பொறுப்பை இலங்கைக்கு வழங்க முடியாது. தாம் நேரடியாக கணக்காய்வு செய்வதாக உலக வங்கி அறிவித்துள்ளமை இலங்கைக்கு பாரிய அவமானமாக உள்ளது. அனைத்து நிறுவனங்கள் மீதும் ஊழல் மோசடி குற்றச்சாட்டு காணப்படுகிறது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணியாக உள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பிணைமுறி மோசடி தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. அரச நிதியை மோசடி செய்தவர்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. காப்புறுதி கூட்டுத்தாபனம், லிற்ரோ நிறுவனம், லங்கா வைத்தியசாலை, டெலிகொம் ஆகிய அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும்போது சமூககட்டமைப்பில் பாரிய நெருக்கடி நிலை தோற்றம் பெறும். டெலிகொம் நிறுவனத்தை தனியார்மயப்படுத்தினால் தேசிய பாதுகாப்புக்கு ஏதாவதொரு வழிமுறையில் பாதிப்பு ஏற்படும்.

அம்பாந்தோட்டைமாவட்டத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை ஐந்து வெளிநாட்டு முதலீட்டுநிறுவனங்களுக்குவழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

குறித்த ஐந்து நிறுவனங்களில் நான்கு நிறுவனங்கள் நட்டமடைந்துள்ளன. அத்துடன்எரிபொருள் துறை சார்ந்த எந்த அனுபவமும் இந்த நான்கு நிறுவனங்களுக்குத் கிடையாது.

நட்டமடையும் வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களுக்கு அரச வளங்களை கையளித்தால் அவர்கள் மிகுதியாக இருப்பதை மோசடி செய்துவிட்டுசெல்வார்கள். ஆகவே, அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் விசேட கவனம் செலுத்த வேண்டும். - என்றார்.

# வாகரை வட்டவான் இறால் வளர்ப்பு திட்டத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு ஒரு மாதத்தில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்

மட்டக்களப்பு வாகரை, வட்டவான் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 27 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இறால் வளர்ப்பு திட்டம்நேற்று(செவ்வாய்க்கிழமை) தனியார்ஒருவரின்ஆளுமைக்குள் சென்றுள்ளது.



இந்த பிரச்சினைக்கு நீதிமன்றத்தின் ஊடாகவே அல்லது பேச்சு மூலமாக ஒரு மாதகாலத்தினுள் இதற்கு தீர்வு காணப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்தில் வட்டவான் இறால் வளர்ப்பு திட்ட பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக அப்போது கொண்டுவரப்பட்டஇறால்வளர்ப்பு திட்டம் தெரிவுசெய்யப்பட்ட 27 பயனாளிகளுக்குவழங்கப்பட்டது. இதனை தனி ஒருவர் தற்போது தனது ஆளுமைக்குள் உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதுடன் மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தபோது இந்த பிரச்சனை தெரியவந்தது.

எனவே இது ஓர் இடியப்பசிக்கலாக உள்ளது. இதற்கு நீதிமன்றத்தின் ஊடாக அல்லது பேச்சு ஊடாக ஒரு மாதகாலப்பகுதிக்குள் தீர்வு எட்டப்படும்.

அதேவேளை மட்டக்களப்பில் மாத்திரமல்ல இலங்கை பூராகவும் சட்டவிரோத கடற்தொழிலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு அந்தந்த பகுதி மீனவர் சங்கங்கள் மற்றும் கடற்படையினர், கடல் தொழில் திணைக்களம், பொலிஸார் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதேவேளை மட்டக்களப்பில் கடலில் வலையை வீசிவிட்டு அதனை அடுத்த நாள் எடுக்க போகும் முன்னர் அதனை ஒரு குழு களவாடி வருகின்றது. இது தொடர்பாக கடற்படை மற்றும் கடற்தொழில் திணைக்களம் இணைந்து ஒருதிட்டம் அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்லடி பாலத்துக்கு அருகில் அமைந்துள்ள மீன்பிடி திணைக்களத்தின் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலைசெயலிழந்துள்ளது. அதில் சமூகவிரோத செயல்கள் இடம்பெறுவதுடன் அடிக்கடி தீமூட்டப்படுவதாக அறிந்துள்ளேன். அதற்கு 3 மாதத்துக்குள் தீர்வு காணப்படும். - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உள்ளகப் பொறிமுறை ஏற்புடையதல்ல

வெளிநாட்டுத்தூதுவர்கள்மற்றும்உயர்ஆணையர்கள் மத்தியில் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து விளக்கமளிக்கும் கூட்டத்தில் பேசிய அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, பொறுப்புக் கூறலுக்கான உள்ளகப் பொறிமுறை ஒன்றைப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல்செயற்பாடுகளுக்காக உண்மையை கண்டறிவதற்கான உள்ளக பொறிமுறை ஒன்றை நிறுவுவதே இதன் மூன்றாம் அத்தியாயமாகும். அத்துடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், தென்ஆபிரிக்காவின் அனுபவங்கள் குறித்து ஆராயவும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது – என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

பொறுப்புக் கூறலுக்காக உள்ளகப் பொறிமுறை ஒன்று நிறுவப்படும் என்கிற கதை மகிந்த ராஜபக்ச காலத்திலிருந்தே கொழும்பினால் சொல்லப்பட்டு வருகின்றது. ஆனால், அது நடைமுறைப்படுத்தப்பட்டதில்லை. போர் முடிந்து 13 ஆண்டுகளாகிவிட்டபோதும் அதற்கான முன்முனைப்புக்கூட எடுக்கப்பட்டதில்லை. அத்தோடு அத்தகைய ஒரு உள்ளகப் பொறிமுறையை அடியோடு ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டார்கள்.

குற்றாவளியேகுற்றத்தைவிசாரிக்கும்நடைமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும் இலங்கை நீதித்துறை மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதும் தமிழர்களின் இந்த நிராகரிப்புக்கான காரணம். ஐக்கிய நாடுகள் மனி உரிமைகள் பேரவையிலும் உலக அரங்கிலும் தமிழர்களின் இந்த நிலைப்பாடு உரத்துச் சொல்லப்பட்டதன் பின்பே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தில் கலப்புப் பொறிமுறை என்று கொள்ளப்படத்தக்க வகையில் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்களை உள்ளடக்கிய பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை இலங்கை அரசே இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றியும் வைத்தது.

தமிழர்களில் ஒரு தரப்பினர் அத்தகைய கலப்புப் பொறிமுறையைக்கூட ஏற்கமுடியாது, பன்னாட்டு விசாரணை ஒன்றே வேண்டும், அதுவே நீதியானதாக இருக்கும் என்று வலியுறுத்தி வருகின்றார்கள். குறிப்பாக காணாமற்போனவர்களின் உறவினர்கள் பன்னாட்டு விசாரணை ஒன்றையே வலியுறுத்தி வருகின்றார்கள். அதற்காக நீண்டகாலமாகப் போராட்டமும் நடத்திவருகின்றார்கள். பன்னாட்டு விசாணை தவிர்த்து உள்ளகப் பொறிமுறையை நம்புவதற்கு அவர்கள் தயாராக இல்லை .

நீதித் துறையில் கடந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்களின் தலையீடே தமிழர்களுக்கு இலங்கை நீதித்துறையின் மீது நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியிருந்தது. இப்போது ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை ஆட்சியாளர்களே செயற்படுத்த மறுத்துத் தூக்கியடித்திருப்பது இலங்கை நீதித்துறை மீது எள்ளளவும் தமிழர்கள் நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்பை அடியோடு மறுத்து நிற்கின்றது. அப்படிப்பட்டதொரு நிலையில் பொறுப்புக்கூறலுக்கு உள்ளகப் பொறிமுறையைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. எனவே அதனைக் கூறி தொடர்ந்தும் பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றுவதை ஆட்சியாளர்கள் நிறுத்தவேண்டும்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசு வாபஸ் பெற்றுக்கொள்ளவில்லை

## பாலித ரங்கே பண்டார கூறுகிறார்



பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதை அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொள்ளவில்லை. மாறாக, சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்திநீதிமன்றம்செல்லஇருப்பவர்களுக்கு வசதி கருதியே சற்று பிற்படுத்தி இருக்கிறோம்.

அத்துடன் சட்டமூலத்தை எதிர்ப்பவர்கள் அதற்கு மாற்று வழியைத் தெரிவிக்க வேண்டும்என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கியதேசியகட்சிதலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கம் வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பாக சிவில் அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினர் கருத்து தெரிவித்து வருகின்றனர். சிலர் விமர்சித்து வருகின்றனர். இந்த சட்டமூலத்துக்கு எதிராக போராட்டங்களையும் சிலர் முன்னெடுத்திருந்தனர். தற்போது நீதிமன்ற விடுமுறை காலமாகும். இவ்வாறான நிலையில் சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தால். அதனை எதிர்ப்பவர்களுக்குநீதிமன்றம்செல்ல முடியாதநிலைஏற்படுகின்றது. இதனை கருத்திற்கொண்டே சற்றுதாமதித்துசட்டமூலத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அத்துடன்சட்டமூலத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தைவாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை. சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்ல யாராவது எதிர்பாத்திருந்தால், அவர்களுக்கு அந்த ஜனநாயக உரிமை இருக்கவேண்டும். அதனை கருத்திற்கொண்டே சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதை சற்று தாமதித்திருக்கிறோம். மாறாகஅரசாங்கம்போராட்டத்துக்கு அஞ்சி பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தைவாபஸ் பெறவில்லை.

மேலும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சரியில்லை. அது ஜனநாயகத்துக்கு விரோதம் என தெரிவிப்பவர்கள் அதற்கு மாற்றுவழிஎன்னஎன்பதைத் தெரிவிக்கவேண்டும்.தற்போது இருக்கும்பயங்கரவாதத்தடைச் சட்டம்கடினமானது.மனிதஉரிமையை மீறும் விடயங்கள் அதில் இருக்கின்றன எனத் தெரிவித்தே, புதிய திருத்தம் மேற்கொள்ளுமாறு பலரும் தெரிவித்திருந்தனர். சர்வதேச அமைப்புகளும் தெரிவித்து வந்தன. அதன் பிரகாரமே தற்போது திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தில்நபர்ஒருவரை கைதுசெய்யவும் முடியும் அவரை தடுப்புக்காவலில் வைக்கவும் முடியும். அதே போன்று அவசரகால சட்டத்தை பயன்படுத்தி யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். அவர்களைத் தடுத்துவைப்பதற்குஜனாதிபதி கைச்சாத்திட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்பயங்கரவாதஎதிர்ப்பு சட்டத்தில் அதில் திருத்தம் மேற்கொண்டுஜனாதிபதியின் அதிகாரம் இல்லாமலாக்கப்பட்டு. தடுத்துவைக்க கைச்சாத்திடும் அதிகாரம் பிரதி பொலிஸ் அதிபருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பிரேசத்தில் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அந்தஅதிகாரம்வழுங்குவதன் மூலம் அரசியல்வாதிகளின் தலையீடுஇல்லாமல்போகிறது.

அத்துடன் புதிய சட்டமூலத்தில் பயங்கரவாதம் என்றால்என்னஎனவரையறை செய்யப்படவில்லை என சில குற்றச்சாட்டு தெரிவித்து வருகின்றனர். சட்டத்தின் பிரகாரம் சட்டத்தை ஏற்றுக்கொள்ளாத யாராக இருந்தாலும் அவர் பயங்கரவாதி என்றே கருதப்படும். சட்டத்தை மீறுகின்றவர்கள் பயங்கரவாதி என்ற பட்டியலுக்கு வராது. அதனால் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மக்களினதும் நாட்டினதும்நலன்கருதியேகொண்டு வரப்பட்டிருக்கிறது. அதில் தவறுகள் இருந்தால் அதனை திருத்தம் செய்வதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது. - என்றார்.

# தொல்பொருள் திணைக்களம் அதிகாரங்களை பௌத்த பிக்குகளுக்கு வழங்கி உள்ளதா?

## சாணக்கியன் கேள்வி



தொல்பொருள் திணைக்களம் தங்கள் அதிகாரங்களை பௌத்த பிக்குகளுக்கு கொடுத்துள்ளதாஎனத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இரா. சாணக்கியன் ஆகியோர் திருகோணமலை, புல்மோட்டை பகுதிக்கு திங்கட்கிழமை விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர்களின்கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் -

திருகோணமலை, புல்மோட்டையில் பிக்குவின் அட்டகாசங்கள் தொடர்பாகக் கடந்த சில வாரங்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுவருகின்றன.

அதனைத்தொடர்ந்து இந்தப்பிரதேசமக்கள், இந்தபிரதேசத்துக்கு விஜயம் செய்து தங்களுக்கு ஆதரவாக அரசியல்வாதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்என்றசெய்தியைக் கூறுவதற்கு நீங்களும் வர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததற்கு இணங்க நாம் இங்கு விஜயத்தை மேற்கொண்டோம்.

சில நேரங்களில் பிக்குமார்கள் நேரடியாக புல்மோட்டை மக்களிடம் வந்து துப்பாக்கிகளைக் கொண்டு அச்சுறுத்துவதும், மிரட்டுவது மற்றும் கற்களை போடுவது போன்ற சம்பவங்கள் இடம் பெறுகின்றது.

வடக்கு-கிழக்கிலே தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் அனைத்துபிரதேசங்களிலுமே இதுபோன்றவிடயங்கள்நடந்து கொண்டுதான் இருக்கின்றது. நாங்கள்இந்தவிடயங்களுக்கு எதிராகப் போராட்டங்களை செய்திருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட ஓர் இடத்தில் இதே பிக்கு இரவு நேரத்தில் இராணுவ பாதுகாப்புடன் வந்து காணி அபகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவரை விரட்டியடித்தோம்.

இது போன்ற அடாவடி பிக்குகளிடம் இருந்து எங்கள் காணியைக் காப்பாற்ற வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

# சிறு குற்றம் செய்தோருக்கு வீட்டுக் காவல் தண்டனை

## புதிய சட்டம் உருவாக்கம் என்கிறார் நீதி அமைச்சர்



சிறைப்படுத்தப்படும் நபர் எந்தவகையானகுற்றத்துக்காக சிறைப்படுத்தப்பட்டாலும் அவரைப்பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அத்துடன் சிறிய குற்றங்களுக்கு ஆளாகுபவர்களை வீட்டுக்காவலில் வைப்பதற்கு முடியுமான வகையில் சட்டம் அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சிறைச்சாலைதிணைக்களத்துக்குரிய அமைச்சின் விடயபொறுப்பான அமைச்சருக்கு சாட்டப்பட்டிருக்கும் அதிகாரத்துக்கு அமைய 3 வருடகாலத்துக்காக நாட்டில் இருக்கும் அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களுக்கும் பிரதேச கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அதன்பிரகாரம்கொழும்பு மெகசின், கொழும்புரிமாண்ட், கொழும்பு வெலிகடை. வட்டரக்க மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளை உள்ளடக்கியதாகநியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பு குழு உறுப்பினர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டில் இருக்கும் சிறைச்சாலைகளில் தற்போது சுமார் 26 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அதில் குற்றவாளியாக்கப்பட்ட 800 பேர்வரைஇருக்கின்றனர். யாரேனும் நபர் ஒருவர் சிறைப்படுத்தப்படுவதற்கு ஏதாவதொருசமூககாரணமாகஇருக்கலாம்.

குற்றம் என்னவாக இருந்தாலும் சிறைப்படுத்தப்பட்ட பின்னர், அவர்களைக் கவனித்து பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற வசதிகளுக்கு மேலதிகமாக கைதிகளுக்குத் தேவையான நலனோம்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு சிறைச்சாலை கண்காணிப்பு குழு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் 1934 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக மனிதாபிமான அடிப்படையில் இந்த நாட்டு சிறைச்சாலை ஒழுங்கு விதிகளில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் இருக்கும் நபர்களை புனர்வாழ்வளிப்பதற்காக சிறைச்சாலைக்குள்ளேயே 6 நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று சிறு குற்றங்கள் செய்வர்களை வீட்டுக்காவலில் வைக்க முடியுமா என தேடிப்பார்ப்பதற்காகசட்டம்அமைப்பதற்கு தற்போது குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நுவரெலியாவிலுள்ள வர்த்தக நிலையங்களில் அதிகூடிய விலையில் பொருள்கள் விற்பனை

நுவரெலியா ஏப்ரல் மாத வசந்த காலம் ஆரம்பமாகிய நிலையில் நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து நுவரெலியா மாவட்டத்தை நோக்கி உள்நாட்டுமற்றும்வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாலும் சித்திரை புத்தாண்டில்நீண்டவிடுமுறைகாணப்படுவதாலும்பெரும்எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடுமுறையை கழிப்பதற்காக வருகை தந்துள்ளனர்.

வசந்த காலத்தை வாய்ப்பாகபயன்படுத்திநுவரெலியா நகர பகுதிகளில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையை மீறி அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என விசனம் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா நகர பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் அரசாங்கத்தால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சலுகை விலைக்கும் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதில்லை எனவும், விலைக்கு மேலதிகமாகபணம்அறவிடப்படுவதாகநுகர்வோர்தெரிவிக்கின்றனர்.

நுவரெலியாகிரகறிவாவி பகுதியிலும், பிரதானநகரிலும் இயங்கி வருகின்ற சில்லறை மற்றும்வசந்தகாலதற்காலிக வர்த்தக நிலையங்களிலும் குறிப்பாக ஹோட்டகளில் உணவுஉள்ளிட்டஅனைத்து பொருள்களும் அதிக விலைக்கே விற்பனை செய்து வருவதாகவும் எந்த வித கட்டுப்பாட்டு விலைக்கும் பொருள்கள் விற்கப்படுவதில்லை குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக நுவரெலியா வசந்த காலத்தினை முன்னிட்டு அமைக்கப்பட்ட தற்காலிக வியாபார நிலையங்களில்கோதுமைமாவில்செய்யப்படும்உணவுபொருள்கள் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதி கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.




மேலும் முட்டை ஒன்று 44 ரூபா முதல் 48 ரூபா வரைவிற்பனைசெய்யப்பட்டு வருகின்றது. ஆனால் முட்டை ஆம்லெட் ஒன்று 110 ரூபாவுக்கு விற்பனை செய்து வருகின்றது. குறித்த விடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டாயம் அத்தியாவசிய பொருள்களின் விலைகளை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு பொருள்களை விற்பனை, காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனையில் ஈடுபடும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள்மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை முன்வைக் கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக நுவரெலியாமாநகரசபையின் விசேடஆணையாளர்திருமதி சுஜீவபோதிமானிடம்வினவிய போது நுவரெலியா வசந்த காலத்திலும் சித்திரை புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் மற்றும் பொருள்களை பதுக்கி வைக்கும் வியாபாரிகள் குறித்தும்கண்டறியவிரிவான தேடுதல் நடவடிக்கையை ஆரம்பிக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு நாங்கள் அறிவித்தல் வழங்கி உள்ளோம் மேலும் மாநகரசபைமூலம்தனியான குழு மூலம் சிற்றுண்டிச் சாலைகள் ஹோட்கலில் வர்த்தகநிலையங்கள், மொத்த விற்பனை நிலையங்கள் ஆகிய வற்றில் தொடர்ந்து விசேட பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறோம், தரமற்ற அசுத்தமான உணவு வகைகளை விற்பனை செய்த நிலையங்களுக்கு சுகாதார பரிசோதகர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏப்ரல் மாதம் முழுவதும் இந்த நடவடிக் கைகளை மேலும் விரிவுபடுத்தி, சோதனை நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படும்என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




## சீமெந்து ஏற்றிச் சென்ற கனரக வாகனம் அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து

### இருவர் காயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பத்தேகம நுழைவாயிலுக்கு அருகில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர்காயமடைந்துள்ளனர்.

சீமெந்து ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி பாதுகாப்பு வேலியில்மோதிகவிழ்ந்ததில் இந்தவிபத்துஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.




இந்தச் சம்பவத்தில் சாரதி மற்றும் உதவியாளருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



இதேவேளை, வீரம்புகெதர, களுகமுவ சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதசாரிகள் இருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இரு பாதசாரிகள், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மற்றும் பின்னால் சென்றவர் ஆகியோர் வீரம்புகெதர மற்றும் குருணாகல் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட போது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## அஜித் ரோஹண உட்பட நால்வருக்கு இடமாற்றம்



சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்கள்நால்வர்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ்தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமேற்கு, வடமத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களின் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களாகக் கடமையாற்றியசிரேஷ்டபிரதி பொலிஸ் மா அதிபர்களான லலித் பதிநாயக்க, ராஜித ஸ்ரீ தமிந்த, அஜித் றோஹன மற்றும் சஜீவ மெதவத்த ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தாடியால் வாகனத்தை கட்டி இழுத்து சாதனை!



தாடியால் வாகனத்தை கட்டி இழுத்து சாதனை புரிந்துள்ளார் செல்லையா திருச்செல்வம் என்ற வயோதிபர்.

மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய செல்லையா திருச்செல்வம், சிறுவயதிலிருந்தே இவ்வாறு வாகனங்களை இழுத்து பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளார்.

அந்த வகையில் கடந்த திங்கட்கிழமை மட்டுவில் ஜங்கரன் சனசமூக நிலையத்திலிருந்து பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் வரையான இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்கு தனது தாடியால் பட்டா ரக வாகனத்தை இழுத்துச் சாதனைபடைத்து, வீரத்துக்கு முதுமை ஒரு பொருட்டல்ல என்பதை நிரூபித்துள்ளார்.



## பேருவளை மீன்பிடித்துறைமுக இறங்குதுறையில் 30 அடி ஆழ நீருக்குள் வீழ்ந்த 12 வயதான சிறுமி

பேருவளை மீன்பிடித் துறைமுகத்தின் இறங்கு துறையிலிருந்து 30 அடி ஆழமான நீருக்குள் தவறி வீழ்ந்த சிறுமி ஒருவரை மீன்பிடி படகில் இருந்த நபர் ஒருவர் காப்பாற்றினார் என பேருவளை மீன்பிடி துறைமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

புத்தாண்டுக்கு மீன் வாங்குவதற்காக தந்தையுடன் சென்றிருந்த 12 வயது சிறுமியே தண்ணீரில் தவறி வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

மீன்பிடிதுறைமுகத்துக்கு மீன் வாங்குவதற்காக அதிக எண்ணிக்கையானோர் வந்திருந்தனர்எனவும், அங்கு கூட்டம்அதிகமாகஇருந்ததால், அந்தநெரிசலில்சமநிலையை இழந்து குறித்த சிறுமி நீருக்குள் வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த மீன்பிடி படகில் இருந்த மீனவர் ஒருவர் உடனடியாகநீருக்குள்குதித்து சிறுமியைகாப்பாற்றியுள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# நுணாவிலில் சுமை தாங்கியோடு எரிபொருள் பவுஸர்மோதி விபத்து

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் ஏ-9 பிரதான வீதியில் நுணாவில் 190 ஆம் கட்டைப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தால் மரவுரிமைச் சின்னமாக அடையாளப் படுத்தப்பட்ட சுமைதாங்கி மீது எரிபொருள் பவுஸர் மோதி விபத்து இடம் பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணி அளவில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.



குறித்த விபத்தால் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமை சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டுவந்த பாரம்பரிய சுமைதாங்கி முற்றாக அழிவடைந்துள்ளது. இந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப் படுத்தப்பட்ட சுமைதாங்கி, இளைப்பாறும் மடம், குடிநீர்க்கிணறு என்பன காணப்படுகின்றன.

இந்த விபத்தால் நொருங்கிய சுமைதாங்கியின் கற்களை நுணாவிலில் வசிக்கின்ற தனிநபர் ஒருவர் உழவு இயந்திரத்தின் மூலம் முற்றாக அள்ளிச் சென்றுள்ளார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் அப்பகுதியில் இருந்து பொலிஸாரால் கொண்டுசெல்வதற்கு முன்னரேயே விபத்தால் இடிந்த சுமைதாங்கி கற்களை சுமைதாங்கி ஒன்று அந்த இடத்தில் இருந்ததற்கான அடையாளமே தெரியாமால் பொலிஸார் முன்னிலையிலேயே அகற்றியமை அப்பகுதி மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று காலை 8 மணி அளவில் இடிந்த கற்களை பொதுமக்கள் பொலிசார் முன்னிலையில் குறித்த நபர் அள்ளிச் சென்றுள்ளார். இது தொடர்பாக அப்பகுதி மக்கள் சாவகச்சேரி நகரசபைக்கு உடனடியாக அறிவித்தும் அந்த இடத்திற்கு சம்பந்தப்பட்ட எவரும் வருகை தரவில்லை. இந்நிலையில் அப்பகுதி இளைஞர்கள் தொல்பொருள் திணைக்களத்திற்கு அறிஜூவித்ததை அடுத்து மேற்படி திணைக்களத்தினர் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்தனர்.




# புத்தாண்டை முன்னிட்டு விசேட சுற்றிவளைப்புகள் 1,500 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

பண்டிகைக் காலத்தில் பொருள்களை அதிகளவில் விற்பனைசெய்தமை, இருப்புகளை மறைத்தமை மற்றும் விற்பனைசெய்ய மறுத்தமை உள்ளிட்ட குற்றங்களுக்காக சுமார் 1500 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப் படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவியரீதியில் சோதனை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க தேவையற்ற உணவுகளைவிற்பனை செய்தல், அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்தல், இருப்புகளை மறைத்து வைத்திருப்பது தொடர்பில் இங்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

மேலும், முட்டை தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் நாள்களில் சந்தைகள் மற்றும் முட்டை பண்ணைகளிலும் சோதனை நடத்தப்படும்.

இதேவேளை பண்டிகை காலங்களில் வர்த்தக மாபியா வொன்று செயற்படுவதாக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்



அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.






# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS









### INCLUSION

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

Travel Date: 19 - 23 May 2023

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 28 செவ்வாய்க்கிழமை 11.04.2023 கதிர் 25

சாதாரண பரீட்சை ஒத்திவைப்பால்

## பாடசாலை விடுமுறையில் மீண்டும் மாற்றம் வருகிறது

2022 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டதை அடுத்து, பாடசாலை விடுமுறைக் காலத்தை திருத்துவதற்கு கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

ஏப்ரல் 17 மீண்டும் தொடங்கும் பாடசாலைகள் மே 12 வரை தொடரும்படியே தற்போதைய அட்டவணை உள்ளது.

அதன் பின்னர் மே 24 வரை சாதாரண தரப் 2

அடுத்த திகதி அறிவிக்கப்படாமலேயே

# உள்ளூராட்சித் தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

நிதி அல்லது நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தாலேயே இனி வாக்களிப்பு




(தன்வீன்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இரண்டாவது தடவையாக காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை மார்ச் 9 நடத்துவதற்கு நாள் குறிக்கப்பட்டது.

ஆனால் அதற்கான நிதி விடுவிக்கப்படாத காரணத்தால் ஏப்ரல் 25 நடக்கும் என்று ஒத்திவைத்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் அதற்கான தபால் மூல வாக்களிப்பு மார்ச் இறுதியில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டபோதும், நிதி அமைச்சு நிதியை விடுவிக்காத காரணத்தால் அது மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் இன்று காலையில் இராஜகிரியவில் உள்ள அலுவலகத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு கூடியது. தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தேர்தல் தொடர்பில் ஆராயப்பட்டது. 2

## எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை இன்று கையளிப்ட

தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையின் இரண்டாவது அங்கம் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் இன்றைய தினம் கையளிக்கப்பட்டது.

தேசிய எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்ரியவினால் குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. இதன் போது, குழுவின் ஏனைய உறுப்பினர்களான தவலிங்கம் மற்றும் ஹமீட் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

தற்போது 8 ஆயிரமாகவுள்ள உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கிலும், எல்லை நிர்ணயங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளிவைக்கும் வகையிலும் குறித்த குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழு தனது அறிக்கையை கையளிப்பதற்கான கால அவகாசம் பெப்ரவரி 28 நிறைவுக்கு வந்திருந் போதும் சமகால நிலை களை கருத்திற்கொண்டு கா அவகாசம் நீட்டிக்கப்பட்டது இந்நிலையில் அக்குழுவி காலம் ஏப்ரல் 30 நிறைவ யவுள்ளது. அதற்கு முன்னதா தமது அறிக்கையை கு கையளித்துள்ளது.

இந்தக் குழுவின் அறி கைக்கும் எதிர்ப்புக்க கிளம்பியுள்ளன. எல்லை நிர்ணயம் தொடர்பில் வர்த் மானி அறிவிப்பைச் செ வதற்கு முன்பாக அதனை மீளாய்வுக்கு உட்படுத் வேண்டும் என்று நாடாளு மன்ற உறுப்பினர் முஜிபு ரரமான் வலியுறுத்தி ருந்தார்.

குளிரூட்டப்பட்ட அறை களில் இருந்தபடி எல்லை நிர்ணய மீளாய்வு செய் யப்பட்டிருப்பதாகவு இது களத்தில், ஊர்களி பெரும் பிரச்சினைகளை உருவாக்கியிருப்பதாகவு அவர் குற்றஞ்சாட்டியிருந்தா

## அறிக்கை இறுதியானதல்ல திருத்தங்களைச் செய்யலாம்

மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு



தேசிய எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு தயார் என்று அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

அத்துடன், இறுதி அறிக்கை ஏப்ரல் 30 அல்லது அதற்கு முன்னதாகக் கையளிக்கப்படும் என்றும் அவர் கூறினார். அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் உள்ளிட்டவை யோசனைகளை முன்வைப்பதற்கு வாய்பளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையின் இரண்டாவது பாகத்தினை இன்றைய தினம் பிரதமர் தினேஷ்குணவர்த்தன இடத்தில் கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொகு கள் மற்றும் கிராம அலுவல பிரிவுகள், எல்லைகள் உ ளிட்டவற்றை குறிப்பிட் அறிக்கையை இன்றை தினம் சமர்ப்பித்துள்ளோம்.

இந்த அறிக்கையானது இறுதியானது அல்ல. ஏற் னவே சமர்ப்பிக்கப்பட்டுள் அறிக்கையின் இரண்டாவது பாகமாகும். இந்த அறிக்கையி காணப்படுகின்ற விடயங்க சம்பந்தமாக அரசியல் கட் கள், சிவில் அமைப்புக்க உள்ளிட்டவை தமது கருத்து களை, யோசனைகளை மு வைக்க முடியும்.

குறிப்பாக, எல்லை பிரச்சினைகள் 2

## மீண்டும் எம்.பியாகுவதற்கு முயற்சிக்கின்றாரா பஸில்?

தீர்மானம் இல்லை என்கின்றது 'மொட்டு'



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச மீண்டும் நாடாளுமன்றம் வருவது தொடர்பில் கட்சிக்குள் கலந்துரையாடல் எதுவும் இடம்பெறவில்லை என்று மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமையை துறந்து பஸில் ராஜபக்ச மீண்டும் நாடாளுமன்றம் வரவுள்ளார் எனவும், இதற்காகத் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலகுவார் எனவும் வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இவ்வாறான கலந்துரையாடல் கட்சிக்குள் இடம்பெறவில்லை. கட்சி தொடர்பில் சிந்தித்தே பஸில் ராஜபக்ச முடிவெடுப்பார். கட்சிக்காகத்தான் அவர் நிதி அமைச்சுப் பதவியைக் கூட இழந்தார் எனவும் ரஞ்சித் பண்டார குறிப்பிட்டார்.

அதே வேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்ச பொது வேட்பாளராகக் களமிறங்குவாரா என்ற கேள்விக்கு அதில் எவ்வித தவறும் இல்லை என அவர் பதிலளித்தார். (02)

## மின்சார வேலியில் சிக்கி வவுனியா இளைஞர் சாவு

வவுனியா வடக்கு - சின்னடம்பன் பகுதியில் யானைக்கு வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில், கனராயன்குளம் - குறிசுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய உலகநாதன் கஜந்தன் என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் தொடர் யானைகள், பன்றிகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்குள்ள தோட்டக் காணி ஒன்றுக்கு யானை வேலி போடப்பட்டிருந்தது.

வேலிக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்த நிலையில், அதனை அவதானிக்காது குறித்த வேலி ஊடாக நேற்று மாலை கஜந்தன் என்பவர் பயணிக்க முயன்றுள்ளார். யானைகளுக்காக வேலிக்குக் கொடுக்கப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில் தூக்கி வீசப்பட்ட அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (02)

## அமெரிக்கக் கப்பலில் தப்ப முயன்ற வடக்கு இளைஞர்கள் நால்வர் கைது

விசாரணைக்காகச் சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு



கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கக் கப்பலில் சட்டவிரோதமாக ஏறி மேற்குநாடு ஒன்றுக்குச் செல்ல முயன்ற நிலையில் கைது செய்யப்பட்ட வடக்கு இளைஞர்கள் நால்வரும், மேலதிக விசாரணைகளுக்காக குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்தால் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த 25 வயது முதல் 32 வயதுக்கு இடைப்பட்ட நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கப்பல் மார்ச் 24 கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததுடன் அது மறுநாள் ஐரோப்பா நோக்கிப் பயணத்தை தொடங்கியிருந்தது.

அது சுயஸ் கால்வாயில் நுழையும்போது, கப்பலில் பணியாளர்கள் தாம் முன்னர் அறிந்திராத நான்கு பேர் கப்பலில் இருப்பதைக் கண்டு, தங்களது நிறுவனத்துக்குத் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து மார்ச் 28 குறித்த இளைஞர்களின் அடையாள அட்டைகளைப் பரிசோதித்தபோது அவர்கள் இலங்கையர்கள் எனக் கப்பலின் பணிக்குழுமினர் உறுதிப்படுத்தி இலங்கைக்கு அருகில் பயணிக்கவிருந்த மற்றுமொரு கப்பலில் அவர்களை ஒப்படைத்தனர்.

குடிவரவு – குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் வழங்கிய அறிவித்தலின்படி, கடற்படை, பொலிஸ் மற்றும் துறைமுகங்கள் அதிகார சபை ஆகியவற்றின் அதிகாரிகள் குழு விசேட படகொன்றில் குறித்த கப்பலுக்குச் சென்று அவர்கள் நால்வரையும் திங்கட்கிழமை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் திருமணமானவர் என்றும், கொழும்புத் துறைமுகத்தில் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனம் ஒன்றின் பெயரில் துறைமுகத்துக்குள் அவர்கள் நுழைவதற்கான அனுமதிப்பத்திரங்களை எடுத்துள்ளனர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் மார்ச் 25 முற்பகல் தொழிலாளர்களின் ஆடை மற்றும் தலைக்கவசங்களை அணிந்து இந்தக் குழுவினர் கப்பலுக்குள் நுழைந்துள்ளனர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட பின்னர் அவர்களுக்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகளை கப்பல் பணியாளர்கள் வழங்கியுள்ளனர். எவ்வாறாயினும், அவர்கள் கொழும்பு துறைமுகத்துக்குள்ளும் மற்றும் கப்பலுக்குள்ளும் அவர்கள் நுழைய உதவிய நபர்களைக் கண்டறிய விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (02)

## புத்தாண்டின் பின் பெரமுனவுக்கு புதிய தலைவர்




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார கருத்து வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு வலுவான தலைமைத்துவம் வரும். தமிழ் – சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் –என்று அவர் கூறினார்.

தலைமைத்துவத்தைப் பஸில் ராஜபக்ச ஏற்பாரா என்ற கேள்விக்கு ரஞ்சித் பண்டா நேரடிப் பதிலை வழங்க மறுத்துவிட்டார். (02)

## சிறந்த தலைவர்களில் பஸிலும் ஒருவராம்



நாட்டுக்குத் தலைமைத்துவம் வழங்கக்கூடிய சிறந்த தலைவர்களில் பஸில் ராஜபக்சவும் ஒருவர். – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, அக்கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பஸில் ராஜபக்சவா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் சிறந்த தலைவர்கள் உள்ளனர். நீங்கள் பஸில் ராஜபக்சவைப் பற்றி கேட்கின்றீர்கள் எனில், நாட்டுக்கு தலைமைத்துவம் வழங்கக் கூடிய சிறந்த – பொருத்தமான தலைவர் அவர்.

பஸில் ராஜபக்ச போர்க் காலத்தில் சர்வதேச ஆதரவைப் பெற்றுத் தந்தவர். போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்கை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தவர். இவ்வாறு தனது திறமையை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் அவருக்கு எதிராகப் போலிக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவை போலியானவை என்பது தற்போது உறுதியாகியுள்ளன. இப்படியான தகுதியான தலைவர்கள் எமது கட்சி வசம் உள்ளனர். – என்றார். (02)

# இலங்கையில் படைத் தளம் அமைக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை

## தூதுவர் ஜூலி ஜே.சுங் தெரிவிப்பு

இலங்கையில்படைத்தளம் அமைக்கும் எண்ணம் தமது நாட்டுக்கு இல்லை என அமெரிக்கத் தூதுவர் ஜூலிஜே.சுங் தெரிவித்தார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, அமெரிக்காவின் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகளின் இலங்கைப் பயணம் குறித்த கேள்விக்குப் பதிலளித்த ஜூலி ஜே.சுங், படைத் தளம் தளத்தைப்பொறுத்தவரையில், அதனை அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லை என நான் மீண்டும் மீண்டும் கூறியுள்ளேன் எனத் தெரிவித்திருந்தார்.

சோஃபா ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவோ அல்லது மறுமதிப்பீடு செய்யவோ தனது நாட்டுக்கு எந்த எண்ணமும் இல்லை என்றும்; ஜூலி சுங் மேலும் தெரிவித்திருந்தார்.

# திருமணத்திற்குச் சென்றவரின் மோட்டார் சைக்கிள் அபேஸ்

திருமணத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்றவர் திரும்பி வந்து பார்த்தபோது நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிள் மாயமாகியிருந்த சம்பவம் ஆவரங்காலில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த எச்.ரி. 5084 இலக்கமுடைய நீல நிற ஹொண்டா சுப்பர்கப் 90 வகை மோட்டார் சைக்கிளே திருடப்பட்டது.

முற்பகல் 10.30 தொடக்கம் 12.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்திலேயே மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டு தொடர்பாக உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு சுற்றுலாவியிடம் 1,200 டொலர் திருடியோர் கைது



பங்களாதேஷ் பயணி ஒருவரிடமிருந்து ஆயிரத்து 200 அமெரிக்க டொலர் பணம் திருடிய இருவரை வெலிகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பங்களாதேஷ் பெண்ணொருவர் மிரிஸ்ஸவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார் எனவும், இதன்போதே அவரது பணம் திருடப்பட்டது எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தெனிப்பிட்டிய மற்றும் மிரிஸ்ஸ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், சந்தேகநபர்கள் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (02)

# மாற்றுத்திறனாளிகளுக்கு வடக்கில் இசைப் போட்டி




வடக்கு மாகாண மாற்றுத் திறனாளிகளின் இசைத் திறமையை வெளிக் கொண்டுவரும் முகமாக முதல்முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கான இசை போட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெற உள்ளது.

சாவிகா சங்கீத அறிவாலயத்தின் ஏற்பாட்டில் ஏப்ரல் 15, நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இந்த இசைப் போட்டி இடம்பெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் பங்கெடுக்க விரும்பும் மாற்றுத்திறனாளிகள் போட்டி இடம்பெறுகின்ற தினத்தில் காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையான காலப்பகுதியில் போட்டி இடம்பெறும் மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

போட்டியாளர்கள் தனிப்பாடல், தனிவாத்திய இசைக்கே அனுமதிக்கப்படுவர்.

போட்டியாளர்கள் தமக்கு விருப்பமான ஏதாவது ஒரு பாடலினை (கர்நாடக சங்கீதம்/ திரையிசை/ மேலைத்தேயம்) 6 நிமிடங்களுக்குள் பாட, இசைக்க முடியும்.

வாத்தியம் இசைப்போர் குறித்த வாத்தியக்கருவியை கொண்டுவருதல் வேண்டும்.

போட்டி நிறைவுறும் வரை பாதுகாவலர் போட்டியாளருடன் இருக்க வேண்டும்.

இப்போட்டிகளில் அனைத்து விதமான மாறுறுத் திறனாளிகளும் வயது வேறுபாடின்றி பங்கெடுக்க முடியும் என இன்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர் ஏற்பாட்டாளர்கள்.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடவடிக்கைகள் பின்னடைவைச் சந்தித்துள்ள தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதோடு, அறிவிக்கப்பட்டவாறு ஏப்ரல் 25 தேர்தலை நடத்த முடியாது என்ற தீர்மானத்தையும் ஆணைக்குழு உறுப்பினர்கள் எடுத்தனர்.

தமது முடிவு தொடர்பில் ஆணைக்குழு விடுத்த செய்திக் குறிப்பில், தேர்தலுக்கு அவசியமான நிதி கிடைக்காத காரணத்தாலும் தேர்தல் ஆணைக்குழுவின் நிர்வாகத்துக்கு அப்பாற்பட்ட காரணங்களினாலும், தேர்தலை மீண்டும் பிற்போடும் நிலைமை ஏற்பட்டுள்ளது – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு தேவையான நிதி கிடைப்பதற்கான உறுதியான திகதி அல்லது தேர்தல் தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றின் தீர்ப்பு கிடைத்ததன் பின்னரே தேர்தலுக்கான புதிய திகதியைத் தீர்மானிக்க முடியும். அதற்கான அறிவுறுத்தலை தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொண்டதன் பின்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களால் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் என்றும் கூறப்பட்டுள்ளது. (02)

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை நடைபெறும் காலத்தில் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது சாதாரண தரப் பரீட்சை தள்ளிப் போயிருப்பதால், அதற்கேற்ப பாடசாலை விடுமுறையும் மாற்றியமைக்கவேண்டியிருக்கிறது. புதிய பாடசாலை நேர அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மே29தொடங்கும்2022ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை ஜூன் 8 வரை நடைபெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2022 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (02)

## அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்டவை தொடர்பில் முறையான பரிந்துரைகளுடன் எமது கவனத்துக்கு கொண்டு வரப்படும் போது நாம் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தயாராகவே உள்ளோம்.

அதேநேரம், எமது அறிக்கையை ஏற்கனவே அரசியல் கட்சிகள், சிவில் அமைப் புக்கள் உள்ளிட்டவற்றின் பார்வைக்காக வைத்திருக்கின்றோம். ஒரு சில தரப்புக்கள் தமது யோசனைகளை எமக்கு அனுப்பி வைத்துள்ளன.

இந்த நிலையில், இம்மாதத்தின் இறுதி பத்து நாட்களில் மேலும் கிடைக்கும் பரிந்துரைகளையும் உள்வாங்கி மாற்றங்கள் தேவைப்படின் அவற்றை மாற்றியமைத்து இறுதி அறிக்கையை ஏப்ரல் 30 அல்லது அதற்கு முன்னதாக கையளிக்கப்படும் – என்றார்.

# திடீரெனத் தோன்றிய தெய்வ விக்கிரகங்கள்







கனவு கண்டதால் மண்ணில் இருந்து மேற்கிளம்பி வந்தனவாம்

தென்மராட்சி – மிருசுவில் மன்னன் குறிச்சிப் பகுதியில் உள்ள வீட்டுக் காணி ஒன்றில் இருந்து திங்கட்கிழமை பிற்பகல் இந்து சமயத்திற்கு உரித்தான தெய்வ விக்கிரகங்கள் சில மண்ணில் இருந்து எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டு வளவில் மண்ணிற்குள் புதைந்த நிலையில் தெய்வ விக்கிரகங்கள் இருப்பதாக வீட்டின் உரிமையாளர் கனவு கண்ட நிலையில் ஐம்பொன்னினாலான 6 விக்கிரகங்கள் மண்ணில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. .

முத்தையா பாஸ்கரன் என்ற குடும்பத் தலைவர் தனது வீட்டுவளவில் விக்கிரகங்கள் உள்ளதாகக் கனவு கண்டார் என்று சொல்லப்படுகின்றது. அதை அடுத்து அதிகாலை எழுந்து அவ்விடத்தைத் தோண்டியபோது ஐம்பொன்னினாலான 12 சிறிய விக்கிரகங்கள் அங்கிருந்தன என்றும் சொல்லப்படுகின்றது.

சிவன் விக்கிரகம் ஒன்று, சிவலிங்கம் ஒன்று, வராகி அம்மன் விக்கிரகம் ஒன்று, ஆறுதலை முருகன் ஒன்று, சிவனும் பார்வதியும் இடப வாகனத்தில் அமர்ந்திருக்கும் விக்கிரகம் ஒன்று, ஒற்றைத் தலை நாகம் ஐந்து, ஐந்துதலை நாகம் இரண்டு ஆகிய விக்கிரகங்களே மீட்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை அறிந்த ஊரவர்கள் பலரும் சம்பவ இடத்திற்குச் சென்று விக்கிரகங்களை பார்வையிட்டு வருகின்றனர்.

குறித்த ஐம்பொன்னினாலான சிலைகள் மண்ணில் புதைந்தது போன்று அல்லாமல் பளபளவென ஒளிர்வதாக சிலைகளை நேரில் பார்வையிட்டவர்கள் தெரிவித்தனர்.

மண்ணில் இருந்து எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இடத்தில் விக்கிரகங்களை வைத்து உடனடியாக ஒரு ஆலயம் அமைக்கப்பட்டுள் ளது.

அயலில் உள்ளவர்கள் பலரும் அங்கு சென்று வணங்கி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலி–ஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

# சிவசேனை போராட்டம்






அரசிற்கு சொந்தமான அச்சுவேலி நெசவுசாலையை அத்துமீறிக் கைப்பற்றி அடாவடித்தனம் புரியும் மதப் பிரிவினரை வெளியேற்றுமாறு கோரி சிவசேனை அமைப்பு இன்று ஆர்ப்பாட்டம் செய்தது.

அச்சுவேலி நெசவு சாலை முன்றலில் காலை 8 மணியளவில் சிறிது நேரம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

குறித்த நெசவுசாலை போரின் பின் இயங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்தக் கட்டடத்தை கிறிஸ்தவ மதப்பிரிவினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டி அது தொடர்பான வழக்கு ஒன்றும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த மத வழிபாட்டிடத்தில் சுற்றுசூழலில் அதிகளவு சத்தம் போட்டு பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெறுவதாகவும், இதன் காரணமாக மாணவர்கள் மற்றும் நோயாளிகள் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றார்கள் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த இடத்தை ஆக்கிரமித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படும் போதகரும் அவரோடிணைந்த பலரும் யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் அத்துமீறி நடந்துகொண்டனர் என்று உதயன் நிறுவனம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் போதகர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தத் தேவாலயப் போதகர் உட்பட மூவர் வெள்ளிக்கிழமை வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களைத் தாக்கி அச்சுறுத்தினர் என்று அச்சுவேலிப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பாக உதயன் செய்தி வெளியிட்டதைக் கண்டித்தே போதகரும் அவரோடு வந்தவர்களும் அத்துமீறி நடந்தனர் என்று உதயன் பத்திரிகை சார்பில் யாழ். பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்தே சிவசேனை அந்தத் தேவாலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியது. தற்போது குறித்த மதஸ்தலம் அமைந்துள்ள நெசவுசாலையினை மீளவும் கைத்தொழில் அமைச்சு பொறுப்பெடுத்து நடத்தவேண்டும் என்றும், சுற்றுச்சூழலில் இடம்பெறும் ஒலி மாசடைதலை கட்டுப்படுத்துவதற்காக அந்த இடத்தில் அமைந்துள்ள மதஸ்தலம் அகற்றப்படவேண்டும் எனவும் கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதனால் அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அடாவடி செய்யும் மதப்பிரிவே வெளியேறு, ஊடகங்களை அச்சுறுத்தாதே, இளைஞர்களின் தொழில் வாய்ப்பை பறிக் காதே, பொதுமக்கள் சொத்தில் மதம் வளர்க்காதே போன்ற பதாகைகளைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.

காலைக்கதிர்



# நாட்டில் மோசமான நிலைமை வரலாம்

## சாலிய பீரிஸ் எச்சரிக்கை



பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் அனுமதிக்கப்பட்டால் நாட்டில் மிக மோசமான நிலைமை ஏற்படுவதற்கு இடமிருக்கிறது. குறிப்பாக பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு வரையறை அற்ற அதிகாரம் வழங்குவது மிகவும் பயங்கரமானது என சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஊடாக பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வரையறை இல்லாத அதிகாரம் வழங்கி இருக்கிறது.

இது மிகவும் பயங்கரமானது. அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. குறித்த சட்டமூலத்தின் பிரகாரம் பயங்கரவாதத்தைத் தடுப்பதென்ற அடிப்படையில் சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்து 90 நாள்கள் பிரதி பொலிஸ்மா அதிபரின் அனுமதியுடன் தடுத்துவைக்க முடியும்.

அத்துடன் சட்டத்தின் பிரகாரம் குறித்த சந்தேக நபரை 48 மணி நேரத்துக்கு முன்னர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினாலும் 90 நாள்கள் தடுப்புக்காவல் உத்தரவை நீக்குவதற்கு நீதிவானுக்கு முடியாது.

நீதிபதியையும் தாண்டிய அதிகாரமே பிரதி பொலிஸ்மா அதிபருக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக வழங்கப்படுகிறது.

அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் பிரதான பிரச்சினையாக இருப்பது பயங்கரவாதம் என்றால் என்ன என வரையறுக்கப்படுவதில் இருக்கும் தெளிவின்மையாகும்.

அதேநேரம் பல்வேறு அமைப்புகளைத் தடைசெய்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் வகையில் உறுப்புரைகள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு பல விடயங் கள் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. இதில் சில சரத்துக்கள் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை மீறும் வகையில் அமைகின்றன.

அதனால் இந்த உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டால் மிகவும் பாதகமான நிலைமை நாட்டில் ஏற்படலாம்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து இதில் திருத்தங்களை கொண்டுவர அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அல்லது இதனை தோற்கடிக்க வேண்டும். – என்றார்.

# கம்பஹா – 727, மினுவாங்கொடை –78 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு!

'உங்களுக்கு வீடு – நாட்டுக்கு நாளை' வீடமைப்பு உதவித் திட்டத்தின் 50 வீதமான வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி 2021 ஆம் ஆண்டு 12 ஆயிரத்து 231 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு அதில் 6 ஆயிரத்து 39 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 2022 ஆம் ஆண்டு 1,465 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 25 வீடுகளே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 1,215 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதில் 727 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் மினுவாங்கொடை தொகுதியில் மட்டும் 159 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் 78 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. கொரோனாவைரஸ்பரவல் மற்றும்நாடுஎதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, 'உங்களுக்கு வீடு – நாட்டுக்கு நாளை' வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம், இந்த வருட ஆரம்பத்தில் வீட்டுத் திட்டத்தின் நிர்மாணப்பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாத வேலைத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக திறைசேரியால் 3 ஆயிரத்து 750 மில்லியன் ரூபா தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, , 'உங்களுக்கு வீடு – நாட்டுக்கு நாளை' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வேலைகளை ஆரம்பித்து பூர்த்தி செய்ய முடியாத அனைத்து வீடுகளையும் கட்டி முடிக்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

உங்களுக்கு வீடு – நாட்டுக்கு நாளை வீடமைப்புத் திட்டம் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சியால் 2020 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது சொந்த வீடு இல்லாத குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கானது. இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ், இலங்கையிலுள்ள அனைத்து 14 ஆயிரத்து 22 கிராம சேவைப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவுக்கும் ஒரு வீடாக 14 ஆயிரத்து 22 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டது.

# போதை பாவனை யாழ். பல்கலை மாணவர்களை உளவளத் துணை சிகிச்சைக்கு அனுப்ப முடிவு!

தடைசெய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டார்கள் என்ற சந் தேகத்தில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை உளவளத் துணைச் சிகிச்சைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் தெரி வித்துள்ளார்.

யாழ்ப்பாணம் – கந்தர்மடம், பழம் றோட் டுப் பகுதியில் உள்ள தனியார் மாணவர் விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம், பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, தடைசெய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டமை மற்றும் போதை மாத்திரை வெற்று உறைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் சந் தேகத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டுப் பின்னர் பல்கலைக்கழக அதிகாரிகள் முன்னிலை யில் விடுவிக்கப்பட்ட மாணவர்களில், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சில மாணவர்களை உளவளத் துணை சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப் பில் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை களை மேற்கொண்டுள்ள பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்களின் சிபார்சின் அடிப்படையில், போதைக்கு அடிமையாகி இருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படும் மாணவர்களைத் தேவையான உளவளத் துணைச் சிகிச் சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்த மாணவர்களின் பெற்றோர்களும் நேரடியாக அழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்படவுள்ளது என்றும், சம்பவம் தொடர்பில் பொலிஸார் எடுக்கும் எந்தச் சட்ட நடவடிக்கைகளிலும் பல்கலைக்கழகம் குறுக்கிடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மாண வர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண் டிருப்பதால், அவர்கள் விடுவிக்கப்பட்டி ருந்தனர். எனினும், மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று (திங்கட்கிழமை) நண்பகல் பரீட்சை முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறுநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் இருவர் மாத்திரமே போதை மாத்திரை உட்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள வைத்தியசாலை வட்டாரங்கள், இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு போதையிலிருந்து மீள்வதற்கான சிகிச்சைகள் வழங்கப்படும் என்று தெரிவித்தன.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைத்தொலைபேசி திருடப்பட்டதா?

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணி ஒருவரின் கைத்தொலைபேசி திருடப்பட்டமை தொடர்பில் சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்தபோது அவ்வாறான திருட்டுக்கான ஆதாரம் எதுவும் பதிவாகவில்லை என கட்டுநாயக்க விமான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி இதனைத் தெரிவித்தார். இலங்கைக்கு வருவதற்கு முன்னர் குறித்த பயணியின் கையடக்கத் தொலைபேசி மத்திய கிழக்கு நாடு ஒன்றின் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டுடன் தொடர்புடைய விமான நிறுவனம் எழுத்து–மூலம் அறிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும், அது நிறைவடைந்தவுடன் அங்கு பெறப்படும் முடிவுகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# ஜீவன் தொண்டமானின் கோரிக்கை ஏற்பு மலையகப் பல்கலை அமைக்க உத்தரவு

## ஜனாதிபதி ரணில் அதிரடி நடவடிக்கை



மலையக பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது மலையகப் பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் விடுத்த கோரிக்கையை ஏற்றே, ஜனாதி பதி மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையால் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அடுத்தக்கட்ட நகர்வுகள் ஸ்தம்பித்தன. இந்நிலையில் இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார். இதன்படி விரைவில் பணி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஷ்வரன், வீ. இராதாகிருஷ்ணன், எஸ்.பி. திஸாநாயக்க, சீ.பீ ரத்னாயக்க ஆகியோரும், ஜனாதிபதி செயலாளர், மாகாண ஆளுநர், அரச அதிபர், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தற்போது ஸ்தம்பித நிலையில் உள்ள அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பது பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நுவரெலியா மாவட்ட சுற்றுலா அபிவிருத்தி, வசந்தகால பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

# உலக அபிவிருத்திகளின் முன்முயற்சித் திட்டம் தொடர்பில் சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

சீனா மற்றும் இலங்கைக்கிடையில் உலக அபிவிருத்தியின் முன்முயற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துதலை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

சீனாவின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் உப தலைவர் டெங் போகிங் கடந்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போதே இந்த ஒப்பந்தம் உட்பட இரு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன என கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய அவசர மனிதாபிமான உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெ முத்திடப்படவுள்ளது. குறித்த ஒப்பந்தத்திற்கமைய 62 மில்லியன் ரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிகள் சீனாவிடமிருந்து கிடைக்கப் பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்த டெங் போகிங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சர் பந்துல குணவர்தன ஆகியோருடன் முக்கிய சந்திப்புக்களிலும் ஈடுபட்டிருந்தார்.

இந்தசந்திப்புக்களின்போது, சீன – இலங்கை இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல், இரு நாடுகளின் நடைமுறை ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் உலகளாவிய அபிவிருத்தி முன்முயற்சியைக் கூட்டாக அமுல்படுத்துதல் தொடர்பாக ஆழமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன எனவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு உட்கட்டமைப்பு, நிர்மாணம், கலாசாரம், கல்வி மற்றும் அவசர மனிதாபிமான உதவி ஆகியவற்றில் இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான உதவி கள் தொடர்பாகவும் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. திறன் மேம்பாடு , மீனவர்களுக்கான ஒத்துழைப்பு வேலைத்திட்டங்கள் , ரயில் சேவைகளை மேம்படுத்தல் போன்றவற்றில் இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான உதவிகள் தொடர்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சாதகமான பதில் வழங்கப்பட்டுள்ளது.

சீன சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் உப தலைவரின் இந்த விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இலங்கையின் பொருளாதார மீட்சி, சமூக மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு உதவும் முக்கிய காரணிகளாக அமையும் என்று சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

இவைதவிர, இலங்கையின் கோரிக்கைக்கு அமைய இலத்திரனியல் தடயவியல் ஆய்வகத்தை நிறுவுவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பாவனை அதிகரிக்க அரசியல்வாதிகளே பிரதான காரணர்

## சுமந்திரன் எம்.பி. சாடல்



இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரிக்க அரசியல்வாதிகளே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் -

அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனை தடுத்து நிறுத்தாமையால் சிறுவர்களும் இளைஞர்களும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் விநியோகத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை முழுமையாக கைதுசெய்யப்படவில்லை. இதில் ஆட்சியாளர்களின் தலையீடு காணப்படுகின்றது.

போதைப் பொருள் விநியோகத்தை தடுப்பது மிகவும் கடினமான விடயமாக இருப்பதால் போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டும். - என்றார்.

# இரு குடும்பங்களுக்கு இடையில் மன்னாரில் மோதல்; ஒருவர் சாவு

மன்னார் சாந்திபுரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றை தொடர்ந்து இடம்பெற்ற கொடூரத் தாக்குதலில் எமில் நகர் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் ஐவர் காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்–

நீண்டகாலமாக சாந்திபுரம் பகுதியில் இரு குடும்பங்களுக்கிடையில் நிலவி வந்த பிரச்சினை பொலிஸ் நிலையம் வரை சென்று சமரசம் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த இரு குடும்பத்துக்கு இடையில் மீண்டும் பிரச்சினை இடம் பெற்ற நிலையில் முரண்பாடு முற்றியுள்ளது.

இந்நிலையில் பலர் இணைந்து கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்திய நிலையில் எமில் நகர் பகுதியைச் சேர்ந்த 34 வயதான சத்தியா என்ற நபர் மரணமடைந்துள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவர் உட்பட ஐவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், கொலை தொடர்பில் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வெடுக்குநாறியில் இந்தியா

வெடுக்குநாறி மலையில் ஆதி சிவன் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரும் இந்து மா மன்றத்தினரும் இந்தியத் தூதுவர் கோபால் பக்லேயை கொழும்பில் சந்தித்து தங்கள் மனக்குறைகளைக் கொட்டியுள்ளனர். இந்த விடயத்தை இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் கவனத்திற்குக் கொண்டு வரும்படியும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். அதனைச் செய்வதாக தூதுவர் வாக்குக் கொடுத்துள்ளார் என்றும் செய்திகள் வந்திருக்கின்றன.

இந்த விடயம் இரண்ட விதங்களில் கவனிக்கத்தக்கது. முதலாவது வழக்கம் போல இலங்கை ஆட்சியாளர் கள் மீதும் தமது அரசியல்வாதிகள் மீதும் மக்கள் கொண்டிருக்கக்கூடிய அவநம்பிக்கையை ஆலய நிர்வாகம் வெளிப்படுத்தியிருப்பது.

அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் மலைக்கு வந்தும் லிங்கத்தை அங்கு வைக்க முடியாது திரும்பிச் சென்றமை மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் புத்தாண்டுக்குப் பின்னர் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து ஒரு முடிவெடுக்கப்படும் என்று கூறி விவகாரம் கிடப்பில் போடப்பட்டமை ஆகியவற்றால் அலய நிர்வாகமும் மக்களும் இன்றைய இலங்கை ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையை இழந்திருக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் பௌத்த, சிங்களப் பேரினவாதத்திற்கும் பேரினவாதிகளுக்கும் ஆதரவாகவே நடந்துகொள்வார்கள், மற்றைய மதங்களுக்கு நீதி செய்ய மாட்டார்கள் என்று நம்பியதன் விளைவாகவே இந்தியாவை இந்து நாடாகக் கருதி அதனிடம் முறையிடச் சென்றார்கள். இது ஒரு நாடாக இலங்கைக்கும் அதன் ஆட்சியாளர்களுக்கும் பேரவமானம்.

அதேபோன்று தமது சொந்த மக்கள் பிரதிநிதிகள் இது விடயத்தில் கையாலாகாதவர்கள் என்று எண்ணத் தலைப்பட்டுள்ளமையின் வெளிப்பாடுதான் அவர்கள் அண்டை நாடு ஒன்றிடம் தமது பிரச்சினைக்குத் தீர்வு கேட்டுச் சென்றிருப்பது.

இரண்டாவது கவனத்துக்குரியது இந்தியா இந்து நாடல்ல. அங்கு ஆட்சியில் இருக்கும் கட்சி இந்துத்துவச் சிந்தாந்தத்தைக் கொண்டது என்பதற்காக இந்தியா இந்து நாடாகிவிடாது. அது ஒரு பல்லினன பல கலாசார பல மத நாடு. அதனுடைய அரசமைப்பு இந்தியாவின் இந்தக் கூறுகளை நன்கு பிரதிபலிக்கக்கூடிய வகையிலேயே எழுதப்பட்டுள்ளது. இந்த வேறுபாடுகளை மட்டுமல்ல சாதிய ரீதியில் காணப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் கவனத்தில் எடுத்து அவற்றையும் களையும் வகையில் எழுதப்பட்டது இந்திய அரசமைப்பு. அப்படியிருக்கையில் இந்தியாவிற்கு வெளியே அதனை ஒரு இந்து நாடாகப் பிரதிநித்துவம் செய்யும் எந்தவொரு நடவடிக்கையையும் புதுடில்லி எடுக்காது. எடுக்கமுடியாது. அங்கிருக்கும் அரசியல் அதனை அனுமதிக்காது.

அப்படிப்பட்ட நிலையில் இந்தியாவிடம் சென்று வெடுக்குநாறியில் சிவலிங்கம் உடைக்கப்பட்டது குறித்து முறையிடுவதன் மூலம் இலங்கை ஆட்சியாளர்களை அச்சுறுத்திவிட முடியாது. தனது முயற்சியால் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையை இலங்கை அரசைக் கொண்டு முழுமையாக நடைமுறைப்படுத்த வைப்பதையே செய்ய முடியாத அல்லது செய்வதற்கு விரும்பாத இந்திய அரசைக் கொண்டு வெடுக்குநாறி மலையில் சிவலிங்கம் வைக்க முயற்சிப்பது நகைப்புக்கிடமானது.

அண்டை நாடுகளுக்கே முன்னுரிமை என்கிற அயலுறவுக் கொள்கையின் மூலம் தன்னைச் சுற்றியுள்ள நாடுகளின் அரசுகளோடு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள முனைந்து நிற்கும் இந்தியா, வெடுக்குநாறி மலை விவகாரத்தில் தலையீடு செய்ய முன்வரும் என்று நினைப்பதும் ஏற்புடையதல்ல. அது நடக்கிற காரியமல்ல. எனவே சொந்தமாக சொந்தக் கால்களில் நின்று எதைச் செய்து தமிழ் மக்கள் தமது மண்ணையும் இருப்பையும் காத்துக்கொள்ள முடியும் என்று சிந்தப்பதே பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரவல்லது. குறுக்கு–வழிகள் வெளிபார்வைக்கு வேண்டுமானால் அழகாக இருக்கலாம் அதனால் பயன் ஏதும் கிட்டாது.



# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் 3,820 தொன் உரம் விவசாய அமைச்சிடம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் மூலம், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பால் கொள்வனவு செய்யப்பட்ட 3,820 தொன் யூரியா உரம், நெல் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக விவசாய அமைச்சிடம், நேற்று (திங்கட்கிழமை) கையளிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத் தளம், குருநாகல் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் அண்மைய பொருளாதார நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 72 ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட சிறுபோக நெல் விவசாயிகளுக்கு இந்த யூரியா உரம் வழங்கப்படவுள்ளது.

அடையாளம் காணப்பட்ட நெல் உற்பத்தியாளர்களிடையே ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவ மூலோபாயத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் அதே வேளை யில் இலங்கையின் விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை நிவர்த்தி செய் வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட 1.5 பில்லியன் ரூபா நிதி உதவி திட்டத்தின் கீழ் இந்த உரம் வழங்கப்பட்டுள்ளது.

உரத்தை கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் எச்.இ. டெனிஸ் சாய்பி , – அதிகம் பாதிக்கப்படக்கூடிய விவசா–யிகளுக்கானயூரியாஉரத்தை விநியோகிப்பது இலங்கையில் மில்லியன் கணக்கான மக்களை பாதித்துள்ள சமூக – பொருளாதார நெருக்கடிக்குதீர்வாக எம்மால் முன்னெடுக்கப்பட்டுள்ள பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.– எனக் குறிப்பிட்டார்.

இதன் மூலம் உடனடி உணவுப் பற்றாக்குறையைத் தடுக்க முடியும். அத்தோடு எதிர்காலத்தில் நிலையான விவசாயத் துறை மாற்றத்துக்கும் இந்த ஒத்துழைப்பு பங்களிக்கும் என்று நம்புகிறோம்.

இந்தத் திட்டத்தின் மூலம், மேற்குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் அரை ஹெக்டேயர் நிலத்தில் பயிரிடும் தகுதியுள்ள ஒவ்வொரு விவசாயிக்கும், 50 கிலோ யூரியா உரம் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# நாட்டின் மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள்

நாட்டில் ஆயுர்வேத மசாஜ் நிலையங்களை (ஸ்பா) ஒழுங்குபடுத்துவதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும், பாட நெறிகளை ஆரம்பிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுதேச மருத்துவ கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

நாட்டில் பல ஆயுர்வேத ஸ்பாக்கள் விபச்சார விடுதிகளாக இயங்கி வருகின்றன எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

'ஆயுர்வேத ஸ்பாக்கள், உள்ளூராட்சி மன்றங்களில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், அவை மேற்பார்வைக்கு உட்பட்டவை அல்ல. ஸ்பாக்களில் காணப்படும் ஆயுர்வேத சிகிச்சையாளர்கள் பலர் முறையான பயிற்சிகளை பெறாதவர்கள் ஆவர். இதன் விளைவாக, ஆயுர்வேத சிகிச்சையாளர்களாகுவதற்கு ஆர்வமுள்ளவர்களுக்கு தேசிய தொழில் தகுதி (என்.வி.கியு) நிலை 4 சான்றிதழைப் பெறுவதற்கு வழிவகுக்கும் புதிய நான்கு மாத பாடநெறியை ஆயுர்வேத திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது' – என்றார்.

# புத்தாண்டு வியாபாரத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களில் சோதனை

## வவுனியாவில் அதிரடி









தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டுஅமைச்சின்உத்தரவுக்கமைய வவுனியா வர்த்தக நிலையங்களில் நிறுவை, அளவைப் பிரிவினர் விசேட சோதனை நடவடிக்கையை நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா, இலுப்பையடி, சந்தை உள்வட்ட வீதி, கண்டி வீதி, பழைய பஸ் நிலையம், நெளுக்குளம், பஜார் வீதி ஆகியபகுதிகளிலேயேஇந்ததிீசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக, வவுனியாவில் உள்ள சதோச விற்பனை நிலையம், காகில்ஸ் பூட்சிட்டி மற்றும் தனியார் பல்பொருள் விற்பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள் என்பவற்றில் இந்த விசேட சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது நிறுத்தல் தராசுகளில் உள்ள முத்திரைகள், நிறுத்தல் அளவைகள், பொதி செய்யப்பட்ட பொருள்களின் நிறுத்தல் அளவைகள் தொடர்பாகவும் அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டன.